

வாகரைவாணனின்
மட்டக்களப்புக்
காவியம்

திரு, கந்தையா. சேகரன்.
அரசடித்தீவு.

# மட்டக்களப்புக் காவியம்

தமிழ் நிதி
வாகரைவாணன்

வெளியீடு.
உலக நண்பர்கள் அமைப்பு
இல - 2, 7ம்குறுக்கு
கல்லடி, வேலூர்
மட்டக்களப்பு.

| | | |
|---|---|---|
| முதல்பதிப்பு | - | 14. 01. 2016 |
| வகை | - | சிறு காவியம் |
| உரிமை | - | ஆசிரியருக்கு |
| விலை | - | 200/= |
| அச்சுப்பதிவு | - | ஷெரோணி பிரிண்டர்ஸ், கூழாவடி, மட்டக்களப்பு. |

| | | |
|---|---|---|
| **FIRST EDITION** | - | **January 14th, 2016** |
| **COPY RIGHT** | - | **Author** |
| **PRINTER** | - | **Sheroni Printers& Publication Koolavady, Batticaloa.** |
| **PRIZE** | - | **200/=** |



**சமூகப் பணியில் சளைக்காது ஈடுபடுபவரும்**

**இந்நூலின் வெளியீட்டாளருமான**

**திரு. ஏ. கங்காதரன் அவர்களின் அருமைத்தாயார்**

**அம... ணிக்கம் ஏரம்ப மூர்த்தி அவர்களின்**

**பாதங்... இந்நூல் ஒரு நன்றிப்படையல்**

**வாகரை வாணன்**

## இது ஒரு சிறு காவியம்........................

இலங்கையின் வரலாற்றில் அதன்தெற்குப் புலத்தில் நிலை பெற்றிருந்த இராச பரம்பரைக்கு நிகராக வடக்கில் நல்லூரிலும் வன்னியிலும் (பண்டாரிக்குளம்) வலிமை வாய்ந்த இராசபரம்பரைகள் உருவானது போல கிழக்கில், மட்டக்களப்பு மண்ணில் தோன்ற வில்லை. இதன் காரணமாகத்தானோ, மட்டக்களப்பு மண்ணின் வரலாறு பொலிவு பெறவில்லை என்று எண்ணத் தோன்றுகின்றது.

மட்டக்களப்பு பற்றிய "மட்டக்களப்பு மான்மியம்" பண்டிதர் வி.சீ. கந்தையாவின் மட்டக்களப்புத் தமிழகம் எஸ்.ஓ. கனகரத்தினத்தின் *MONOGRAPH OF THE BATTICALOA DISTRICT OF THE EASTERN PROVINCE* வெல்வவூர்க் கோபாலின் "மட்டக்களப்பு வரலாறு - ஒரு அறிமுகம்" ஆகிய நூல்கள் எந்த வகையிலும் பூரண வரலாற்று நூல்கள் அல்ல. அவற்றுள் மட்டக்களப்பு மான்மியம் சில வரலாற்று நிகழ்வுகளைக் கொண்டிருப்பினும் அவற்றோடு அதீத கற்பனையும் கலந்திருப்பதைக் கற்றோர் கண்டுணரலாம்.

இந்தப் பின்னணியிலேயே எனது 'மட்டக்களப்புக் காவியம்' வெளிவருகின்றது. மட்டக்களப்பு வரலாற்றின் ஒரு பழைய நிகழ்வை (உலகநாச்சியாரின் காலப்பகுதி கி.பி. 4ம் நூற்றாண்டு) மையப்படுத்தி அதனைச் சுற்றி மட்டக்களப்புத் தமிழ் மக்களின் பாரம்பரியம் கலை, பண்பாட்டு அம்சங்களைப் பின்னிப் பிணைந்ததாகவே இக்காவியம் புனையப்பட்டுள்ளது.

என்னைப் பொறுத்த வரையில் மட்டக்களப்பு மண்ணில் ஒரு சங்கிலியன் அல்லது பண்டாரவன்னியன் தோன்றியிருப்பானேயானால் எனது கவிதைப் பசிக்கு நல்ல தீனிகிடைத்திருக்கும். கலிங்கத்துப் பரணி போல ஒரு காவியம் உருவாகியிருக்கும். ஆனால் துரதிஸ்டவசமாக மட்டக்களப்பு மண் அத்தகைய வாய்ப்பினை எனக்கு வழங்கவில்லை

எனவே, உள்ளதை வைத்தே இந்தக் காவியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆயினும் இன்று கூட சில பிரகிருதிகள் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தையே காவியம் அல்ல என்று கூக்குரல் இடும்போது மட்டக்களப்புக்காவியம் ஒரு காவியமா என்று கேட்கக்கூடும். அவர்களுக்கு நான் சொல்லும் பதில் இதுதான் மகாகவி பாரதியின் பாஞ்சாலி சபதம், பாரதிதாசனின் பாண்டியன்பரிசு,புரட்சிக்கவி, கண்ணதாசனின் மாங்கனி, முடியரசனின் வீரகாவியம் ஆகிய

நூல்களைத் தமிழ் உலகம் காவியம் என்று கையில் ஏந்திக் கொள்ளுமாயின் எனது மட்டக்களப்புக் காவியத்தையும் அது ஏற்றுக்கொள்ளும். இந்த நம்பிக்கை எனக்கிருக்கிறது.

பல்வேறு வேலைகள், சுமைகள் - அழுத்தங்கள் மத்தியில் ஒரு சில நாட்களில் உருவான இந்தக் காவியம் - எனது மண்ணின் எழுச்சிக்கு ஓர் உந்து சக்தியாக இருக்குமேயானால் அதுவே எனக்குக் கிடைத்த மிகச் சிறந்த விருது ஆகும்.

அன்புடன்
**வாகரைவாணன்**

ஆரணிஅகம்
வித்துவான்.
அ.சரவணமுத்து வீதி
நாவற்குடா, கிழக்கு
மட்டக்களப்பு
14.01.2016

## ண்டபத்தின் கால்கள்


- இயல்
- இயல் ய்வ வணக்கம்
- இயல் – ண்டத்தின் குட்டித் தீவு
- இயல் – 4. ரண வாயில்
- இயல் – 5. மட்டக்களப்புத் தேசம்
- இயல் – 6. கலிங்கத்திலிருந்து ....
- இயல் – 7. பழந்தமிழ்ப்பூமி
- இயல் – 8. மாநகரம் மண்முனை
- இயல் – 9. புதுமனை புகுவிழா
- இயல் – 10. நாச்சியாரின் நல்லரசு
- இயல் – 11. குகன் ... சிறைக் குடிகள்
- இயல் – 12. "சம்பான்" துறை சொல்லும் சரித்திரம்
- இயல் – 13. நனி வள நாடு
- இயல் – 14. எழுவான் கரையிலே.......
- இயல் – 15. படுவான் கரையிலே ......
- இயல் – 16. மானம் போற்றும் மண்
- இயல் – 17. கோவில் குளத்தில் ஒரு கோட்டம்
- இயல் – 18. மனதிற்கினிய மணவிழா
- இயல் – 19. வண்ணமலர்ப் பந்தலிலே.....
- இயல் – 20. தாமரை பூத்த தடாகத்திலே
- இயல் – 21. நீலவான் நிலவினிலே
- இயல் – 22. திருவிழாத்தேசம்
- இயல் – 23. கொக்கட்டியில் ஒரு கோயில்
- இயல் – 24. எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்
- இயல் – 25. தைப்பொங்கல் தமிழ்ப்பொங்கல்
- இயல் – 26. அறுவடைவிழா
- இயல் – 27. கண்ணகி விழா
- இயல் – 28. நாச்சியார் பார்த்த நாட்டுக் கூத்து
- இயல் – 29. வெறியாட்டு
- இயல் – 30. சிறு தெய்வ வழிபாடு
- இயல் – 31. போர்க்களம்
- இயல் – 32. அன்னையின் அறிவுரை
- இயல் – 33. முடிசூட்டுவிழா
- இயல் – 34. மங்களம் சுப மங்களம்

# பாயிரம்

அன்னை என் நாட்டை, அழகு தமிழ் நாட்டை
மன் புகழ் பேசும் மட்டக்களப் பென்னும்
தென்னை வளர் நாட்டை, தேன் பாயும் நாட்டை
வண்ணத் தமிழ்க் கவியில் வடிக்க நான் விழைந்தேன்

பாடும் மீன் நாட்டை, பழந் தமிழர் நாட்டை
ஆடும் கூத்தரங்கு அணி செய்யும் நாட்டை
கூடும் கடல், வாவி குதூகலிக்கும் நாட்டை
சூடும் புகழ்த் தமிழில் சொல்ல நான் துணிந்தேன்

நிழல் சொரியும் மரங்கள், நின்று நிலமெங்கும்
பழம் சொரியும் நாட்டை பழனமது நெல்லைக்
களம் சொரியும் நாட்டை கரையில்லா விருப்பால்
வளம் சொரியும் தமிழில் வரைய நான் முயன்றேன்

விண் பொங்கும் நாட்டை, விதை பொங்கும் நாட்டை
மண் பொங்கும் நாட்டை, மலர் பொங்கும் நாட்டை
பண் பொங்கும் நாட்டை, பால் பொங்கும் நாட்டை
பொன் பொங்கும் தமிழில் புகல நான் முனைந்தேன்

சேர நல்நாட்டை சேர்ந்த நம் நாட்டை
பாரம்பரியச் சிறப்பு பண்பாடு போற்றும்
பேர்மிகு நாட்டை பெருமை கொள்நாட்டை
சீர்மிகு தமிழில் செப்பநான் துடித்தேன்

# தமிழ்த் தெய்வ வணக்கம்

தாயே... தமிழே தனயன் நான் நின்னை
ஆயிரம் விதமாய் அலங்காரம் செய்வேன்
வாயெல்லாம் நீயே வார்த்தையாய் வருவாய்
ஆய நற்கவிதை அவதாரம் எடுப்பாய்

நான் பிறந்த நாடு நனி சிறக்க வேண்டும்
வான் பிறந்த நிலவாய் வளர்ந்துவர வேண்டும்
ஊன் பிறந்த பற்று ஊறுவதால் கேட்டேன்
தேன் பிறந்த தேசம் திசை அளக்க வேண்டும்

மட்டக்களப்பென்னும் மணித் திரு நாட்டைக்
கட்டி நீ எழுப்பு! கல்வியிலே உயர்த்து!
எட்டுத் திசையிலும் எழுந்தது நிற்க
தொட்டுன்னைத் துதித்தேன், துணை நீ வருக!

பாரதி தமிழே பணிந்து நான் கேட்டேன்
வேர் நீ எனது விலாசமும் நீயே
நார் நான் இனிய நறுமலர் நீயே
தேர் நான் என்னில் தேவி நீ அமர்வாய்

ஆசைமிகவாக அன்னைத் திருநாட்டைக்
ஓசைக் கவிதையில் உட்கார வைத்தேன்
வாசத் தமிழே என் வலது கரமாவாய்
மாசு இருந்தால் எனை மன்னித்தருள்வாய்



# குமரிக் கண்டத்தின் குட்டித் தீவு

இந்திய மண்ணின் எழு தென் திசையில்
அந்தக் கண்டம் அமைவுறத் தோன்றும்
முந்தைத் தமிழர் முடிபுனைந்தாண்ட
இந்தக் கண்டம் குமரி என்றழைப்பர்

அருகில் கண்டம் இரண்டதில் ஒன்று
கரு நிற மனிதர் களிப்புடன் வாழும்
அரும் பெருங்கண்டம் ஆபிரிக்கா ஆகும்
மறுபுறம் அவுஸ்திரேலியா! மனதிற் கொள்க!

மனு எனும் அரசன் மண் குமரி ஆள்வான்
இனமவன் தமிழன் இணையிலா வழுதி
குணமதில் சிறந்தோன் கொற்றம் அமர்ந்து
மனமது நிறைய மாநிலம் புரப்பான்

கொடுங்கடல் ஒருநாள் கோபித்தெழும் } Importen.
தடமது இன்றி தமிழ் நிலம் மறையும்
இடமது மாறும் இரு பெருங்கண்டம்
படமது புதிதாய்ப் பாரிது கொள்ளும்

கடலது விழுங்க காவலன் குடியைத்
திடமுடன் வடக்குத் திசையதில் அமைந்த
இடமதில் இருத்தி இகமது போற்ற
குடை நிழல் அமர்ந்து கொற்றம் புரிவான்


கண்டந்தன்னில் கடுகென எஞ்சும்
பண்டைப்பூமி, பார் புகழ் எல்லம்
துண்டு அதனில் துலங்குவர் தமிழர்
விண்டு கூறுவர் வித்தகர், அறிஞர்

முற்குடி வாழ்ந்த முந்நீர் எல்லம்
அக்குடி வந்த அருந்தமிழ் வம்சம்
இக்குடி என்றும் ஈழ நன்னாட்டில்
புக்கது அல்ல புவனம் அறியும்!

எல்லம் என்பது ஈழமென ஆகும்!
வல்ல குடிகள் வாழ்ந்தனர் ஈங்கு
வில்லவர் வேடர் விரி புகழ் நாகர்
மல்லர் இயக்கர் மண்ணின் மைந்தர்

நாவலந் தீவிது நானிலம் சொல்லும்
காவலர் நாகர் கண் இதுவாகும்
பாவலர் போற்றும் பழந்தமிழ்ப் பூமி
தாவிடும் கடலும் தழுவியே மகிழும்

இந்த நாடு எங்கள் நாடு
தந்தை நாடு தாயாதி நாடு
முந்து நாடு முத்தமிழ் நாடு
சொந்த நாடு சுவர்ண நாடு



# தோரணவாயில்

குன்றினில் மயில்களாடும்
குருவிகள் புறாக்களெல்லாம்
மன்றென அதனைக் கண்டு
மாநாடு நடத்திச் செல்லும்
கன்றுகள் பாயும் அந்தக்
கழனிகள் அரங்கமாகும்
ஒன்றியே தமிழர் வாழும்
ஊர் எங்கள் மன்னம்பிட்டி!

ஊரதில் பிட்டி ஒன்று
உயரமாய் இருந்ததாலே
பேரது சூட்டலானர்
பிரியமாய்த் தமிழர்கூடி
ஏரது ஓடும் பூமி
எருதுகள் வால் முறுக்கும்
சீரதுவாகும் எங்கள்
செந்தமிழ்ச்சீமை தன்னின்

உள் நுழை வாயிலாகும்
ஓங்கிய மதில்களோடு
எல்லையில் அமைந்ததாலே
எதிரிகள் தாக்கும் போது
வல்லதோர் அரணேயாகும்
வனம், சிறுகுன்று எல்லாம்
கள்ளர்கள் தானும் இங்கே
காலது வைக்க மாட்டார்!

முத்துக்கல், காண்டக்காடு
முந்தையர் வாழ்ந்தபோது
புத்தரே பிறக்கவில்லை
புராதனத் தமிழர் வீடு
எத்தனை ஆண்டுக் காலம்
எம்மவர் ஆண்ட பூமி
இத்தலம் அறியும் எல்லாம்
இதற்கென்ன சான்று வேண்டும்?


வன்னியர் என்னும் அந்த
வம்சத்தில் வந்த மக்கள்
மண்ணது ஆளலானார்
மறவராய்ச் சிறக்கலானார்
எண்ணரும் யுத்தம் செய்து
ஏந்தல்கள் வியக்கும் வண்ணம்
விண்ணினை அளக்கலானார்
விஞ்சிடும் புகழினாலே!

நாச்சியார் என்னும் அந்த
நங்கையர் தாமும் அன்று
ஆட்சியும் செய்யலானார்
அதன் சிறப்பெல்லாம் நெஞ்சில்
காட்சியாய் விரியும் அ்.தைக்
கண்டவரெல்லாம் வன்னி
மாட்சியில் திளைக்கலானார்
மன்னவர் வம்சம் அன்றோ..!

மன்னவன் அமரசேனன்
மனமதன் விருப்பத்தாலே
மண்ணதைத் தானமாக
மறக்குல வீரமுத்து
பெண்ணிடம் அளிக்கலானான்
பின் வந்த குடிகள் தாமும்
வன்னியர் வம்சமாகும்
வரலாறு சொல்லுமம்மா!

படையாட்சி என்னும் அந்தப்
பட்டமும் பெற்றமக்கள்
தடையது தாண்டும் வீரர்
தளபதியாகப் போரில்
இடையதன் வாளினாலே
எதிரியின் தலையைக் கொய்து
மடையது வைக்கும் சூரர்
மற்றென்ன சொல்ல வேண்டும்?

மட்டக்களப்பு என்னும்
மாண்புறு தேசந்தன்னைத்
தொட்டுமே நிற்கும் வாயில்
தொல்புகழ் மன்னம்பிட்டி
கட்டிய கோட்டை தன்னைக்
காத்திடும் வீரன் போல
திட்டமாய் நிற்கும், கண்டு
தேனகம் மகிழுமம்மா!



# மட்டக்களப்புத் தேசம்

மான் பாயும் காடு, மட்டக்களப்பெங்கும்
தேன் பாயும் சோலை, தெரிந்து அளி கூடும்
மீன்பாயும் ஆறு, மிதந்து வரும் பாடல்
வான் பாயும் மேகம், வளம் செய்யும் தேசம்

புல்லாடும் வெளிகள், பூமியதில் குளிரும்
நெல்லாடும் வயல்கள், நின்றழகு செய்யும்
கல்லாடும் குறிஞ்சி, கண் கவரும் காட்சி
மல்லாடும் அலைகள், மனமள்ளும் கானல்

மரமெல்லாம் பூக்கள், மண்ணெல்லாம் வாசம்
புரமெல்லாம் செழுமை, பொய்வானம் இல்லை
கரவெல்லாம் இல்லை கை நிறையச் செல்வம்
உறவெல்லாம் இனிக்கும் ஒரு பகையும் இல்லை

தெருவெல்லாம் மரங்கள் தெரியுமதன் நிழலில்
பெருகும் வெயிற் சூடு பெயர்ந்தப்பால் போகும்
குருவி, கிளி, மைனா, கொஞ்சுமிசைக் குயில்கள்
அருகிருந்து பழங்கள் ஆசையுடன் உண்ணும்

வளவெல்லாம் வாழை வளர்தெங்கு கமுகு
அழகான பந்தல் அதில் நெளியும் கொடிகள்
இளங் காலை நேரம் எழில் கொஞ்சும் பூக்கள்
பளபளக்கும் ஒளியில் பல கோடி இன்பம்.

ஊரெல்லாம் காற்று உலாவரும் அந்தத்
தேரேறி வாசம் தெருவெல்லாம் நுழையும்
ஆராரோ அதனால் ஐம்புலனும் இழப்பார்
பேர் புகழ் நாட்டின் பெருமை இது ஒன்றோ?

வயல் வெளியில் கேட்கும் வாய் குளிரப் பாட்டு
புயல் வண்ண ஆற்றில் பூத்து வரும் பாட்டு
மயல் கொள்ளச் செய்யும் மட்டக்களப்பெங்கும்
இயல்பான வாழ்க்கை இது எங்கும் உண்டோ?

வாகை மரமெங்கும் வண்ணமுறு பூக்கள்
தோகை என ஆடும் தொட்டு வளி மகிழும்
போகம் என அங்கு பொன்வண்டு கூடும்
ஏகம் அது என்றே இலை நன்னும் மெல்ல!

வெற்றி எனும் பொருள் விள்ளும் ஒரு விருட்சம்
பற்றியதன் பூவைப் பழந்தமிழர் அன்று
உற்ற தொருமாலை உகந்தவர் தொடுப்பார்
கொற்றவன் மார்பில் கொலுவிருக்கும் நன்கு

திரை ஓடி கடலில் தினம் கூடி மகிழும்
கரை ஓரம் தென்னை கண்டு அது நாணும்
தரைமீது நண்டு தான் நடந்து பழகும்
நிரையாகக் கீச்சான் நின்று தபஞ் செய்யும்

கடலதன் ஓரமாகக் கவினுறு கிளிஞ்சல் சேரும்
புடமது இட்ட தங்கம் போலெனத் தாழம் பூக்கள்
படகுகள் குதிரை போலப் பாய்ந்திடத் தருணம் பார்க்கும்
இடமது நெய்தல் மண்ணில் இதந் தரு காற்று வீசும்

காற்றதன் சுகத்தில் வாழும் கானலின் புட்கள் எல்லாம்
ஏற்றதோர் இடமே நெய்தல் என்றவை பேசிக்கொள்ளும்
கூற்றமும் வந்தால் கூட குளுகுளு வளியில் ஆடி
சீற்றமும் தணியும் தீய செயலையும் மறக்குமாமே!

ஆழியின் ஓசை கேட்கும் ஆதவன் திசையில் அந்த
மேழியின் ஓசை கேட்கும் மேற்கினில் பழனம் தன்னில்
கோழியின் ஓசை கேட்கும் கூர் இருள் விலகிச் செல்லும்
வேலியின் ஓசை கேட்கும் விதவிதக் காட்சியம்மா

ஆலயமணியின் ஓசை அவ்விளங்காலை நேரம்
சாலவும் கேட்கும் அந்தி சந்தியில் பூசை எல்லாம்
கோலமாய் நிகழும் அங்கு குவிந்திடும் மக்கள் கூட்டம்
வேலனின் புகழைப் பாடி வீழ்ந்தடி வணங்குவாரே

ஊரெல்லாம் கூத்து உற்சவம் போலாம்
பேரெல்லாம் நாட்டப் பெருமையுடன் நடக்கும்
பாரெல்லாம் கூடும் பகல் ஆகும் இரவு
போரெல்லாம் மூளும் புறப்பாட்டுக் கேட்கும்

கைத்தாளம் கேட்கும் களரி எலாம் அதிர
மத்தாளம் முழங்கும் மண்வாசம் கமழ
தத்தித்தாமோடு தகதத்தக எல்லாம்
சுத்தமாய் ஆடி சுபம் சொல்லி முடிப்பார்

கூத்தோடு வசந்தன், கொம்பு முறி, மகுடி
பார்த்து மனம் களிப்பார் பகல் இரவாய் மக்கள்
மூத்த கலை வளர்க்கும் மூதூரின் பண்டைக்
கீர்த்தி இதுவாகும் கேட்டசெவி குளிரும்

சாதிமதம் பார்க்காச் சமூகம் இதுவாகும்
வேதியரின் நூல்கள் வேதாந்தம் ஓதும்
ஆதிமதக் கொள்கை அனுட்டிப்பார் இல்லை
நீதி வழி ஒன்றே நிற்குமொரு நாடு!

என் நாடுபோல இன்னுமொருநாடு
மண்ணுலகில் இல்லை மனதாரச் சொல்வேன்
பொன்நாடு  தமிழர் புகழ்பாடும் நாடு
கண்ணெனக் கொள்வோம் கவசம்என ஆவோம்

## கலிங்கத்திலிருந்து...

துலங்கு இந்தியக் கண்டந்தன்னில்
கலிங்கம் என்றொரு கவினுறு தேசம்
நிலமெலாம் ஆண்ட நிகரில்லா அசோகன்
பலங் கண்டஞ்சிப் பணிந்ததோர் பூமி

திருவிடம் ஆங்கு திராவிட மொழிகள்
பெருமிடம் வகிக்கும், பேசும் நல்மொழிகள்
அருமொழி அனைத்தும் அம்மண் தன்னில்
உருவது சிதையும் உள் நுழை மொழியால்!

பௌத்தம் என்னும் பார் புகழ் சமயம்
வகுத்த கொள்கை வழி தன்னில் நாடு
மகத்துவம் பெற்று மாண்புடன் விளங்கும்
செகத்திற்கது சிறந்ததோர் ஒளியாம்

மன்னன் குகசேனன் மண்ணது ஆள்வான்
அண்ணல் அவன் புதல்வி அழகு மிகு நாச்சி
சின்னவன் நாதன் சேய் அவனோடு
கண்ணெனக் குடிகள் காத்தவன் உயர்வான்

அம்பிதனில் ஏறி அக்காலம் கலிங்கர்
நம் நாடு வருவார், நாச்சியது அறிந்து
தம் தந்தை ஆசி தான் பெற்றுக் கொண்டு
நம்பியவனோடு நாகர் மண்நோக்கி,...

கலந்தனில் வருவாள் கடல் முதற்பயணம்
குலமது போற்றும் குறையில்லாத் தவசம்
மலர்க் குழலுள்ளே மறைத்து வைத்திருப்பாள்
நலந்தரு லிங்கம் நங்கைகரம் இருக்கும்.


மணிபல்லவம் என மாநிலம் சொல்லும்
அணி நகர் தன்னை அவள் ஓடம் சேரும்
இனிதுற நாகர் இருந்தரசாளும்
தனித் தமிழ்த்தேசம் தாரணி அறியும்!

அந்நகர் தங்கி அனுபுரம் என்னும்
தொன்னகர் செல்வாள், தோகையாள் நாட்டின்
மன்னவன் கண்டு மனம் விட்டுப் பேசி
இன்னுயிர்த் தவசம் எடுத்தவள் கொடுப்பாள்

அரிய பொருள் கண்ட அரசனவன் மகிழ்ந்து
உரிய பொருள் கேட்பாய், உவந்து நான் அளிப்பேன்
பரிசு என அந்தப் பாவையவள் அதற்கு
ஒரு சிறு கிராமம் உள்ளபடி கேட்பாள்!

மன்னனது கேட்டு மாதவளைப் பார்த்து
தன்னன்பு நண்பன் தமிழ் மண் ஆளும்
அண்ணலவன் சிங்கன் அறிய ஒரு முடங்கல்
என் கையால் எழுதி இப்போதே தருவேன்

என்றவனும் கூற ஏந்திழையாள் மகிழ்ந்து
நன்றி மிகச் சொல்வாள் நயந்து அவன் பண்பை
அன்றந்தப் பொழுதும் அரண்மனையில் கழியும்
ஒன்றும் அவள் நெஞ்சம் ஊர் அதன் மேலே!



# பழந்தமிழ்ப் பூமி

ஊர்ப் பெயர்யாவும் உறுதிபடக் கூறும்
ஆர் தேசம் என்று! அனைத்தும் நம் உடைமை
வேர் நாம்! விருட்சமும் நாம்! விளக்கம் எதற்கு?
பார் எல்லாம் இதனைப் பல்லாண்டாய் அறியும்

மண்ணில் தமிழ் மணம் மதர்த் தெழும்
விண்ணிலும் அதுவே விரிந் தெழும்
பொன்னெதற்கு? இந்தப்பூமியே போதும்!
கண் நமக்கு! காத்து நாம் பேணுவோம்!

பட்டிப்பளை என்னும் பழந்தமிழ்ப் பூமி
தொட்டிலது தமிழர் தொன்மையது உறங்கும்
பட்டறையில் நெல், பால், தயிர், பழங்கள்
கொட்டிக்கிடக்கும் எம் கொப்பாட்டன் தேசம்!

அம்பி பல வந்து அலை மீது கூடும்
சம்பான்துறையில், சான்றோரின் பூமி
தம்பால் பெற்ற தமிழரவர் தேசம்
வெம்பு மண் இல்லா விளை வயல் எங்கும்!

சம்பான்துறையில் சகமது போற்றும்
அம்மாவேந்தன் கூத்திகன் அமைத்த
செம்பொன் மாளிகை சீருடன் நின்று
எம் மாநிலம் என எடுத்துரை செய்யும்!

நாகர் முனை எனும் நம் தமிழ்ப் பூமி
போகம் விளைமண், புறம் அகம் போற்றும்
வாகுறு மக்கள், வாண்மையவர் செல்வம்
ஈகையிலும் அவர் இமயத்தைப் போலாம்!

கோவில் நகரம் கோனவன் இராவணன்
தாவில் நகரம், தமிழர் பெரு நகரம்
பூவில் இது போல் புகழ் நகர் இல்லை
மாவிலங்கையின் மணி நகர் இதுவே!

உன்னரசு கிரி என்று உலகம் சொல்லும்
தன்னரசு அங்கு தமிழரசு நடக்கும்
பெண்ணரசி பின்பு பேரரசு செய்வாள்
பொன்னரசி என்னும் புகழ் நாமத்தாளே!

மலையர் குகநாடு மட்டக்களப்பென்று
உலகமிதைச் சொல்லும், ஓங்கு புகழ்த்தேசம்
அலைகடல், ஆறு அழகு மிகு பொய்கை
தலமதன் செல்வம் தமிழரவர் உடைமை!

பாணமை என்னும் பழந்தமிழ் மண்ணில்
தானமைந்திருந்த தனிப்பெரும் நகரம்
கானமை முல்லை, கடல் சூழ்நெய்தல்
வானமை போல வயல் வெளி மருதம்

தீர்த்த வாவியே தீகவாவியாம்
மூத்த தமிழர் முது சொம் அதுவாம்
பூத்த தாமரை பொன்மலர் போல
பார்த்த நெஞ்சம் பரவசம் அடையும்


அரண் எனக் குன்று அமைவுற நிற்கும்
முரண் பகை தன்னை முற்றாய் அழிக்கும்
திரன் மிகு தேசம் தேவரவர் சேர்ந்து
வரன் போர் புரியினும் வர்கையது சூடார்!

வாவியது சூழ்ந்த வனப்பு மிகு நகரம்
காவியது மலரும் கரு நீலக்கோலம்
கூவி எழும் அலையும் கும்பிட்டே நகரும்
ஓவியத்தைப் போலும் ஒரு நகரம் இதுவே!

இங்கிருந்தாலும் ஏந்தலவன் தன்னை
மங்கைவள் கண்டு மடல் தன்னைத் தருவாள்
சிங்கனவன் ஏற்று செய்திதனை அறிவான்
தங்கமவள் உள்ளம் தவித்தபடி இருக்கும்.

மடலது படித்த மன்னன் குணசிங்கன்
இடமொன்றளிப்பேன் எவருமங்கில்லை
அடர் பெருங்காடு அம்பி துறைக்கப்பால்
மடந்தை நீ கொள்க, மனமாரச் சொல்வான்

அரசனுரை கேட்ட ஆயிழையாள் உள்ளம்
பரவசமாகும், பாவை பின் விளித்து
ஒரு தரம் அல்ல ஒரு நூறு தடவை
கரவின்றி நன்றி கைகூப்பிச் சொல்வாள்!



## மாநகரம் - மண்முனை

மண் முனையாம் அந்த மாநிலம் தன்னை ஆளும்
பெண்ணவள் நாச்சியாராம், பிறந்தகம் கலிங்கம் என்பார்
மன்னவன் ஆசியோடு மண்ணது சேர்ந்த பின்னால்
பொன்னவள் அரசியானாள் பூமியோர் வாழ்த்துவாரே!

காடினை அழித்துத் தானே கவினுறு நகரம் ஒன்று
ஈடிணை இல்லை என்றே எவருமே சொல்லும் வண்ணம்
தேடினள் உழைப்பினாலே தேவரின் மயனும் தானும்
வாடினன் இதுபோல் தன்னால் வனைந்திடக் கூடுமாமோ?

மாநகர் தன்னைச் சூழ மதிலது அமையும் ஆங்கு
கோநகர் அதுவே அந்தக் கோயிலின் குளத்தின் ஓரம்
வானகர்முட்டும் வண்ணம் வனப்புறு மனையும் செய்வாள்
தேனகர் மக்கள் எல்லாம் திகைத்தனர் சிறப்பினாலே

சுண்ணமும் நறையும் சேர்த்து சுவரது எழும்பும் நல்ல
எண்ணமும் கனவும் அந்த எழிலுறு அரணுமாக
வண்ணமும் வடிவும் பார்த்து வாயது ஊறுவார்கள்
தண்ணமும் இதமும் சேரத் தானது மயக்குமாமே

தோரண வாயில் பாடும் மீனதன் தோற்றம் போல
வாரணம் இரண்டும் அங்கே வாய்த்ததோர் சிற்பமாக
காரணம் ஆன அந்தக் கடவுளின் பாதம் போற்றி
ஆரணம் முழங்க வல்லோர் அமைத்தது மகிழுவாரே

முத்தது ஒளிரும் அந்த முகப்பினில் நிலவைப் போல
புத்தெழில் ஊட்டும் அந்தப் பூமியே சொக்கிப் போகும்
வித்தகக் கலைஞர் கூடி விதம்விதமாக நூறு
சித்திர வேலைப்பாடு செய்தெழில் கூட்டுவாரே!


விண்ணினைத் தழுவும் மாடம் விரிமுகில் சூழும் மாடம்
பொன்னினால் ஆனமாடம் புது எழில் வீசும் மாடம்
கண்ணினை அள்ளும் மாடம் கற்பனைக்கெட்டா மாடம்
மண்ணதன் மக்களெல்லாம் மனமாரப் போற்றுவாரே!

நடந்திடும் போது அந்த நாற்புறச் சுவர்களெல்லாம்
படமென மனிதர் தோற்றம் பாங்குறக் காட்டக்கண்டு
மடந்தையர் நாணலானார் மற்றவர் மகிழலானார்
இடமது தேவலோகம் என்றவர் ஏங்குவாரே!

நாளெலாம் அதனைக் காணநாற்புறம் இருந்து மக்கள்
சூழுவார் கடலைப்போல சொக்குவார் எழிலைக் கண்டு
நீளுமே காலம் மக்கள் நெஞ்சதை ரசிக்கும் போது
ஆளுமே அவரின் ஆசை அதைவிட்டு நகருவாரோ?

அரண்மனை வேலை யாவும் அழகுறப் பூர்த்தியாகும்
அரன் அவன் வேலை என்று அரசியும் மகிழலானாள்
கரமது குவிப்பார் மக்கள் கவினுறு கோட்டம் பார்த்து
வரமிது என்பார் எங்கள் வாழ்க்கையில் உயர்ந்ததாமே

மாளிகை தன்னைச் சுற்றி மலர்வனம் உதயமாகும்
யாழினில் இசையைப் போல வண்டது பாடிச் செல்லும்
நாளினில் மலரும் பூக்கள் நறுமணத் துகழ்களெல்லாம்
பூழியில் கலக்கும் அந்தப் பூமியே சொர்க்கமாகும்.



## புதுமனை புகுவிழா

மண்முனை நகரமெங்கும் மங்கல அணிகள் பூணும்
பொன்னொளி வெள்ளம் தன்னில் பூமியே மிதவை ஆகும்
விண்ணவர் தாமும் அந்த விந்தையைப் பார்க்கலானார்
கண்படும் என்றே மக்கள் கவலையில் மூழ்கிப் போவார்

தெங்குகள், பூகம், நல்ல தேன் பழக்கதலி வாழை
சங்கமாகும் நாளை சரித்திரம் பேசும் வண்ணம்
அங்குல நிலமும் கூட அழகினில் மூழ்கிப் போகும்
திங்களே இரவில் கண்டு திகைத்திடம் மாறுமம்மா!

சாலையின் மருங்கிலாடும் சரம் பல வகையிலாகும்
காலையின் மலர்கள் அங்கு கண்கொள்ளாத் தாமமாகும்
ஓலையின் பின்னல் தன்னை ஒரு பெருங்கலையே என்று
சாலவும் புகழ்வார் மக்கள் சந்தியில் நின்றவாறே

தாமரைப் பூவைப் போலும் தண்டினில் விளக்கம் கண்டு
பூமகள் கூசிப்போவாள் பொன்னுடல் தெரியலாமோ?
மாமகள் ஜொலிப்பாள் உள்ளம் மகிழ்வினில் திளைத்துப்போகும்
காமனின் விழாவோ என்று கண்டவர் கதைக்கலானார்

மங்கல நிறை குடம் மாவிலைத் தோரணம்
எங்குமே வரிசையாய் இருபக்கம் ஓரமாய்
அங்கவர் வைப்பார் அப்புதுமை தன்னை
எங்கெவர் காண்பார்? இந்திரலோகமோ?

வடிவுற விளங்கும் அந்த மாளிகை தன்னுள் நாச்சி
குடிபுக நாளும் பார்த்து குறித்ததும் மன்னர்க்கெல்லாம்
படிவுற அழைப்பும் தந்து பரவசந் தன்னில் ஆழ்வாள்
கடிதினில் விழாவுக்கான காரியம் தொடருமங்கே

மன்னனவன் வண்ணன் மணித் தேரில் வருவான்
அண்ணலவனோடு அணி வகுக்கும் சேனை
பென்னம்பெரும் கடலோ? பிரளயமோ? என்பார்
இன்னும் அவன் போல எத்தனையோ அரசர்

மட்டக்களப்பாளும் மன்னனவன் சிங்கன்
அட்ட திக்கும் திரள அணித்தேரில் செல்வான்
கட்டழகன் தம்பி காவலனைத் தொடர்வான்
பட்டணம் முழுவதும் படையெடுக்கும் பின்னால்!

கதிர்வெளி எனும் அந்தக் கழனி சூழ் கிராமம் தன்னை
பதி எனக் கொண்டு வாழும் பழந்தமிழ் மக்களெல்லாம்
புதுமனை விழாவைக் காணப் புயலெனக் கூடலானார்
மதுமலர் போலும் நாச்சி மனமது மகிழலானாள்

முருகன் நம் தெய்வம் ஆளும் முத்தமிழ் ஊராம் எங்கள்
வெருகலில் வாழும் மக்கள் விரைந்துமே செல்லலானார்
அருகினில் உள்ள ஊர்கள் அணி அணியாய்க் கூடும்
பெருகிடும் மக்கள் வெள்ளம் பெண்ணிவள் களிக்கலானாள்!

மாங்கேணி காயான்கேணி மற்றந்தப் பனிச்சங்கேணி
ஆங்கந்த விழாவைக்காண அணிஅணியாகச் செல்லும்
பாங்குடன் மக்கள் தம்மைப் பணிந்துமே ஏற்பாள் நாச்சி
ஓங்கிய பண்பினாலே உள்ளத்தில் நிறையலானாள்

அரசரவர் வரவே அரசியவள் நாச்சி
இரு கரங்கள் குவித்து இன்முகமாய் ஏற்று
அருமை மிகு கூடம் அழைத்தங்கு செல்வாள்
உரிமையுடன் மக்கள் ஓடிப்பின் செல்வார்!

வாத்தியங்கள் முழங்கும் வரவேற்புக் கீதம்
மூத்த தமிழ் மொழியில் மோகனமாய்க் கேட்கும்
பார்த்தவர்கள் எல்லாம் பரவசத்தில் ஆழ்வார்
ஆர்த் தெழும் மகிழ்ச்சி அலை அலையா யங்கே


மாளிகையின் கதவை மன்னனவன் மேகன்
நாழிகையில் திறப்பான் நல்மித்தம் பார்த்து
வாழி எனும் ஓசை வானதிரும், நாச்சி
தோழியர்கள் சூழத் தொடர்ந்தவனைச் செல்வாள்

சிங்கனுடன் தம்பி சேர்ந்தங்கு செல்வான்
தங்கமென மின்னும் தனி அழகுக் கூடம்
அங்கவர்கள் அமர்வார் ஆயிரமாய் மக்கள்
பங்கமது இன்றிப்பந்தியிலே நிற்பார்

அன்பளிப்புக் குவியும், அழகு மிகு பொருட்கள்
மன்னனவன் மேகன் மணிவயிரம் பதித்த
வண்ணமுறு ஆரம் வனிதையிடம் தருவான்
எண்ணம் போல் இன்னும் எத்தனையோ பரிசு

குணசிங்கன் பரிசு கொடுத்துளம் மகிழ்வான்
மனமள்ளும் பொருட்கள் மாளிகையை நிறைக்கும்
தனம் அள்ளி வள்ளல் தாமாகத் தருவார்
கணப் போதுள் செல்வம் கடலாகப் பெருகும்

பொருள் எல்லாம் கண்டு பூவையவள் நாச்சி
மருளவில்லை எல்லாம் மக்களுக்கே என்பாள்
அருளுவாள் அள்ளி அது கண்டு ஏழை
பெருந்துயரம் நீங்கும் பெண்ணரசி மகிழ்வாள்



# நாச்சியாரின் நல்லரசு

வள்ளுவன் சொல்லைப் போல வழுவில்லா ஆட்சியாலே
உள்ளங்களெல்லாம் நாச்சி உருவமே பதியும், நாட்டில்
எள்ளளவேனும் மாசு எவருமே பேச மாட்டார்
நல்லரசென்றே மக்கள் நாவெல்லாம் புகழுமம்மா!

சிலம்பது உணர்த்தும் பாடம் செவ்வையாய் அறிந்ததாலே
குலம், மதம் கொள்கை என்னும் குறுகிய வட்டம்தன்னை
நலம் தரும் ஆட்சி செய்யும் நாச்சியார் கொள்ளுவாரோ?
நிலம் அது போற்றும் வண்ணம் நெறிவழி நிற்கலானாள்

ஆட்சியின் மையமாக அறமது விளங்கும் கெட்ட
சூழ்ச்சிகள் ஏதும் இல்லை சூதுகள் செய்வார் இல்லை
மாட்சிமை மிக்க தென்று மக்களே சொல்லும் வண்ணம்
நாச்சியார் ஆளலானாள், நாடெல்லாம் போற்றுமம்மா!

காதது கைத்த போதும் கழறிடும் அமைச்சர் வார்த்தை
மாதவள் ஏற்றுக் கொள்வாள், மாற்றுரை பகர மாட்டாள்
தீதென உணர்ந்த போது திரும்பியே பார்க்கமாட்டாள்
வேதியர் ஆனதுபோதும் வெறுத்தவர் ஒதுக்கலானாள்

பக்கத்து அரசினோடு பகையின்றி ஆளலானாள்
திக்கதன் நாகநாட்டுத் திறல் மிகு மன்னன் தன்னை
ஒக்கலாய்க் கொள்ளலானாள் ஓரினம் என்பதாலே
மக்களும் அதனைக் கண்டு மனமது மகிழலானார்!

கோட்டையின் முடியில் நந்திக் கொடியது பறக்குமங்கு
கூட்டமாய்ச் செல்லும்மக்கள் கும்பிடத் தவறமாட்டார்
வீட்டினைப் போல நாட்டின் விளக்கென அரசியாவாள்
காட்டினில் மிருகந்தானும் கவலையேயின்றி வாழும்.

பஞ்சமே அறியார் மக்கள் பழனங்கள் எல்லாம் நெல்லு
விஞ்சவே விளையும் நித்தம் விருந்தினர் ஓம்புவார்கள்
வெஞ்சமர் இல்லை அங்கு விரோதிகள் யாரும் இல்லை
அஞ்சிடும் மனமும் இல்லை அமைதியில் வாழும் தேசம்

உழைப்பவர் வாழும் பூமி உறுபசி இல்லா நாடு
களைப்பது அறியா நாடு காரியம் செய்யும் நாடு
விளைப்பன விளையும் ஆங்கு விதவித பயிர்கள் நூறு
தழைப்பன அன்றி ஏதும் தன்னிலை மாறல் இல்லை.

உழவது செய்வதாலே ஊர்களில் எல்லாம் நல்ல
விழவது நடக்கும் மக்கள் விழிகளும் மூடமாட்டா
களவது அறியார் யாரும் கையது நீட்டல் இல்லை
குளமதில் மலரைப் போல குடிகளின் முகங்ளெல்லாம்



# குகன்...சிறைக்குடிகள்

காட்டினைக் கழனியாக்கி கவினுறு தேசமாக்கி
நாட்டினில் மக்கள் தம்மை நாற்புறம் அமரச் செய்யக்
கூட்டினன் பலரை அந்தக் குகன், சிறைக் குடும்பத்தாரை
தேட்டமாய் அவரும் இந்தத் தேசத்தைப் பேணலானார்

இந்திய தேசந் தன்னில் இருந்து பல் இனத்தாரெல்லாம்
வந்திடம் கொள்ளலானர், வளமது குவிக்கலானர்
முந்தவர் சேரர் அந்த முக்குர், செட்டிமார்கள்
இந்த மண் ஏகி என்றும் இனிதுற வாழலானார்!

பாரத தேசம் என்னும் பழம் பெரும் பூமி தன்னின்
வேர் என இருக்கும் பண்பு விரிந்த நல்ஞானம் எல்லாம்
ஓர் பெரும் செல்வமாக ஊர் இதில் கலந்ததாலே
ஆர் என்ன சொன்ன போதும் அசைவுற நிற்குமாமே!

மலையாளம், கலிங்கம் மண்ணதனைச் சேர்ந்தோர்
குலையாமல் ஒன்றிக் குடும்பம் என வாழ்வார்
நிலையான பற்று நிலம் இதிலே கொண்டார்
தலை போன போதும் தமிழ் காத்து வாழ்வார்

கை வைத்தியம் செய்வார், கடிதினிலே வருத்தம்
மெய்விட்டுப் போகும், மேன்மை அது பெரிதாம்
செய் வினை, சூனியம் செர்ந்தபல தீமை
பொய்யில்லை தீரும், புலமை அதில் மிக்கார்

சர்ப்பம் அது தீண்டின் சற்றும் அவர் அஞ்சார்
அற்பம் என எண்ணி அதைத் தீர்த்து வைப்பார்
கற்பனையா? இல்லை! கண் சாட்சி சொல்லும்
அற்புதமே வாழ்க்கை, அது தொடரும் நாளும்!

மந்திரம் மாயம் என்னும் மலையாள வித்தை எல்லாம்
வந்திங்கு சேர்ந்து பெரும் வரவேற்புப் பெற்றதாலே
சொந்தமே ஆகும் மக்கள் சொல்லுவார் கதைகள் நூறு
விந்தையே அதனின் ஆற்றல் வேற்றவர் பேசலானார்!

தேங்காயும் பாலும் திரண்டெழும் எண்ணெய்யும்
ஈங்கவர் உணவில் இரண்டறக் கலந்திடும்
ஆங்கவர் பழக்கம், அவ்வாட்டம் கூத்துக்கள்
தாங்கியே சிறக்கும் எங்கள் தாய்த் திருதேசம்

முந்தையக் குடிகள் அம் முதுபெரும் இயக்கர் நாகர்
வந்தவரோடு சோந்து வதுவையும் செய்யலானார்
செந்தமிழ் ஒன்றே மக்கள் சேர்ந்திடச் செய்யும் ஏதும்
சந்தேகம் வேண்டா எங்கள் சரித்திரம் சொல்லுமாமே



## "சம்பான்" துறை சொல்லும் சரித்திரம்

பார் புகழ் சீன தேசம்
படகது "சம்பான்" என்னும்
பேர் மிகு பட்டினோடு
பெறற்கரும் பொருட்களோடு
தேர் என அசையும் அந்தத்
திரை எழும் கடலின் மீது
ஊரெல்லாம் ஓடிச் செல்லும்
ஒப்பற்ற துறையின் ஓரம்

மட்டது சொரியும் எங்கள்
மண்ணதன் தெற்குப் பக்கம்
தொட்டது நிற்கும் அந்தத்
தோணியைக் கண்டோரெல்லாம்
பட்டெனக் கூவலானார்
பருத்தியை மறக்கலானார்
வட்டமாய்ச் சுற்றி நின்று
வனப்பதில் திளைக்கலானார்

வாணிபம் பெருகும், தமிழர்
வாழ்வது சிறக்கும் கண்டால்
நாணிடும் மங்கை போல
நன்செய்க் கதிர்களெல்லாம்
காணியின் அழகுக் கோலம்
கண்டவர் உள்ளந்தன்னில்
பாணியாய் இனிக்குமம்மா
பகர நான் முடியுமாமோ?

ஆறு தன் வளத்தையெல்லாம்
அனுதினம் அள்ளிக் கொட்டும்
சோறிடும் வயல்களெல்லாம்
சோலையில் பழங்கள் எங்கும்
பேறது இதனைப் போல
பெற்றதோர் தேசம் உண்டோ?
கூறுக என்பார் மக்கள்
குதூகலம் வாழும் நாடு!

சீனர்கள், யவனர், யூதச்
செமித்தியர், அரபு நாட்டார்
தேனது பொழியும் எங்கள்
தேசத்தை நாடலானார்
வானது போலும் உள்ளம்
வாய்த்த நம் தமிழர் அன்று
தானமாய் அவர்க்குப்பல
தந்துமே மகிழலானார்

துறையதில் இருந்து நாளும்
தூரத்து நாட்டிற்கெல்லாம்
குறையறு பொருட்களோடு
கொள்ளையாய் அரிசியோடு
நிறைவாகக் கப்பல் எல்லாம்
நிரை நிரையாகச் செல்லும்
சிறந்த நல் அகிலின் வாசம்
செகமெல்லாம் மயக்குமம்மா!

அகிலதன் வாசம் போல
அகமதை ஈர்த்துக் கொள்ளும்
புகலரும் சந்தனமும்
பொன் போலும் சாய வேரும்
சகமிதைக் கெடுக்கும் பானம்
சாராயம் என்னும் அரக்கும்
தொகை தொகையாக ஏற்றி
தோணிகள் நகரும்மெல்ல

மயிலதன் தோகையோடு
மதயானைத் தந்தங்களும்
தயிரதில் பிறக்கும் நெய்யும்
தக்கவெண் பஞ்சுச்சாக்கும்
உயரவே வளரும் தெங்கில்
ஒன்றியே இருக்கும் காயும்
அயல்நாடு தன்னை நோக்கி
அம்பிகள் சுமந்து செல்லும்

கலமது செல்லும் காட்சி
கண்ணது குளிரக் காண
அலையதன் ஓரமாக
அந்தியில் மக்கள் வெள்ளம்
குல மகள் நாச்சியாரின்
கொற்றமும் நடக்கும் காலம்
நிலமது மட்டக்களப்பு
நிகரில்லாச் சொர்க்கமாகும்!.



# நனி வள நாடு

நாடதன் வளத்தைக் காண
நாச்சியார் செல்லலானார்
ஈடில்லா அழகின் வெள்ளம்
எழுவானில் பாயக்கண்டு
ஓடியே நோக்கலானாள்
ஒவ்வொரு கோணமாக
ஆடிடும் அவளின் உள்ளம்
ஆனந்தப் போதையாலே!

எழுவானின் எழிலை நன்கு
ஏந்தித் தன் உள்ளம் தன்னில்
வழுவிலாப் படுவான் ஊரை
வாஞ்சையாய் நோக்கலானாள்
முழுநிலாப் போலும் ஆங்கு
மூண்டெழும் வண்ணம் கண்டு
தொழுதவள் நிற்கலானாள்
தோற்றமே மயக்கிப் போடும்!

எழிலதை ரசித்த பின்பு
எழுந்ததோர் உணர்ச்சி தன்னை
மொழிந்திடக் கூடுமாமோ?
மோனத்தில் நிலைக்கலானாள்
அழிந்திடா அழகுக் கோலம்
ஆயிரம் ஆண்டுக்காலம்
கழியினும் மாறுமாமோ?
கவிதையே சாட்சியாகும்!.

## எழுவான் கரையிலே.....

எழுவானில் கதிரோன்
எடுத்தடி வைப்பான்
முழுவானும் அழகில்
மூழ்கிப் போம் அதனால்
தொழுவானமாகும்
துதிக்கும் புள் இனங்கள்
இளமங்கை நாச்சி
இரு விழிகள் பருகும்!

கானலின் அழகுக் கோலம்
கண்களால் கொள்ளலாமோ?
வானமே தோற்றுப் போகும்
வளைந்ததைக் கூர்ந்து பார்த்து
தேசமே ஆளும் நாச்சி
தெரிந்ததைக் கூறலானாள்
காணுமோர் பொருளும் நல்ல
கவிதைகள் எழுதச் சொல்லும்

ஊரினை அழகு செய்யும்
உப்பாறு மெல்ல மெல்ல
ஊர்ந்தது செல்லும் அந்த
ஒயிலினைக் காண்போரெல்லாம்
பேர் பெறு கவிஞராவார்
பெறற்கரும் சொத்து தன்னை
தீர்த்தமே என்று மக்கள்
தினம் அதில் குளிக்கலானார்

கடலதன் அலையின் மேலே
கலமது ஏறிச் செல்லும்
தடையென ஆன போதும்
தாண்டிடும் குதிரை போல
படையெனத் திரளும் மீனை
பற்றியே அள்ளிக் கொண்டு
விடையது பெறுவார் எங்கள்
மீனவர் மாலை நேரம்!

வரிசையில் நிற்கும் தென்னை
வார்கடல் ஓரமாக
பரிசெனக் குரும்பையோடு
பார்ப்பவர் நெஞ்சமெல்லாம்
அரியதோர் செல்வமென்று
ஆயிரம் தடவை சொல்லும்
உரியதைக் காக்க வேண்டும்
உறுதியாய் எண்ணலானாள்!

தென்னையின் ஓலை தன்னைத்
தேடியே பிடிக்கும் காற்று
உன்னியே ஆடும், அந்த
ஊஞ்சலின் ஆட்டத்தாலே
மண்ணது குளிர்ந்து போகும்
மக்களும் களிப்பில் ஆழ்வார்
பொன்னது போலும் கானல்
புதியதோர் கோலம் பூணும்

நறுமண வாசத்தோடு
நாற்புறம் தாழங்காடு
திருமணம் அதனைக் காற்று
திக்கெலாம் ஏந்திச் செல்லும்
ஒரு மணம் அதனைப் போல
உலகிது கண்டதாமோ?
பெருமணல் வெளியிலெல்லாம்
பெருகிடும் வெள்ளம் போல!

அலைகடல் ஓரம் தன்னை
　　அங்காடி ஆக்கிக் காட்டும்
பலவித சிப்பி, சங்கு
　　பார்ப்பவர் கண்களெல்லாம்
கலையதில் கண்டதாலே
　　கையினில் எடுத்துக் கொண்டு
விலையது பேசலானார்
　　விளையாட்டுப் பிள்ளை போல!

கொக்கது கரையில் குந்தும்
　　கொழுத்ததோர் மீனுக்காக
பக்கெனக் கவ்விக் கொள்ளும்
　　பாடம் நாம் படிக்க வேண்டும்
தக்கதோர் தருணம் வேண்டும்
　　சாதனை நிகழ்த்திக் காட்ட
சொர்க்கமே எதிர்த்த போதும்
　　சுகமாகக் கையில் வீழும்!

அலையது ஆடும் துள்ளி
　　ஆகாயத்திரையின் மீது
விலையது சொல்ல ஒண்ணா
　　விதவிதக் கோலம் தோன்றும்
சிலையென ஆவாள் நாச்சி
　　சிலிர்த்திடும் அவளின் மேனி
கலை மிகு அழகையெல்லாம்
　　கண்களால் பருகலானாள்.

உடல் தனைப் பேணும் வண்ணம்
　　ஒவ்வொரு நாளும் காலை
நடையினில் செல்லும் நண்டு
　　நடுவினில் அலைகள் ஓடி
தடையது செய்த போதும்
　　தாண்டியே செல்லும் பாங்கு
படையெனப் பகை வந்தாலும்
　　பயம் இலை என்று சொல்லும்

பொன் மலர் சூடும் அந்தப்
புன்னையின் அழகுக்கோலம்
பன்மடங்காகும் காலைப்
பரிதியின் ஒளியினாலே
தண்ணென ஆகும் அந்தத்
தரையினில் சாய்ந்தோமானால்
கண்ணது மூடிக்கொள்ளும்
கவலையும் தோன்றுமாமோ?

பொன் மஞ்சள் நிறத்தில்
பூவரசம் பூக்கள்
தன் இதழை அகலத்
தான் திறக்கும் நேரம்
வண்ணமது கண்டு
வண்டோடி ஊதும்
பண்ணிசையில் உலகம்
பம்பரமாய்ச் சுழலும்!



# படுவான் கரையிலே.....

படுவான் கரை என்னும்
பசுமை மிகு மண்ணில்
நெடுவான் போல் நிறைய
நெல்வயல்கள், தோட்டம்
நடுவான் போல் எங்கும்
நல்லொளி நாற்புறமும்
மடுகுளம் வாவி ஏரி
மலர் ஒன்றே தோன்றும்!

வரம்பது எல்லையாக
வாலிபப் பெண்கள் போல
நிரம்பவே அழகினோடு
நிற்கின்ற நெற்கதிர்கள்
கரமது குவியும் அந்தக்
காட்சியைக் காணும் போது
சிரமதன் மகுடமாகச்
செந்தமிழ்ப் பூமியம்மா!

கதிரது குலுங்கும் மெல்ல
காற்றது வீசும் வேளை
புதுவித ஓசை என்றே
புலனது மயக்கம் கொள்ளும்
நிதம் இது இன்பமாகும்
நிலம் என்னும் மங்கை நல்லாள்
வித விதக் கோலம் காட்டி
விழிகளில் நிறையலானாள்

சூடது போடும் போது
சுவையாகப் பாடும் பாட்டு
ஏடது கொள்ளுமாமோ?
ஏழிசை வெல்லுமாமோ?
காடது தானும் பெய்யும்
கவிமழை தன்னில் தோய்ந்து
ஈடில்லா வளத்தைக் காணும்
என் தமிழ் ஆற்றல் என்னே!

எருமைகள் குளிக்கும் வேளை
ஏறியே அவற்றின் மேலே
உரிமையாய்ப் பனையான் மீன்கள்
ஓடியே பாயக் கண்டு
அரிய நல் உணவே என்று
அருகினில் நிற்கும் கொக்கு
தருணத்தைக் கைவிடாது
தாவியே கொத்திக் கொள்ளும்!

மாடுகள் அடையும் பட்டி
மலையென வைக்கோல் போர்கள்
வீடதன் வளவிலெல்லாம்
வீறுடன் வளரும் வாழை
கோடது போல ஆங்கு
கொடியது வளரும் பந்தல்
நாடதன் வளத்தைச் சொல்ல
நாவொன்று போதுமாமோ?

சேனைப்பயிர் சோளன்
செழித்தோங்கிப் பெரிய
தூணைப் போல் நிற்கும்
தூக்கித் தன் இடுப்பில்
ஆனைக்கை போலும்
அருங்குலைகள் தாங்கும்
வானைப் போல் மண்ணின்
வளம் கொஞ்சமாமோ?

சோழன் குலை தன்னைச்
சுவைத்துண்ண விரும்பி
நாளும் வரும் கிளிகள்
நங்கையர்கள் பரணில்
சூழவர இருந்து
"சோ" வென்று கலைப்பார்
வாழும் ஒரு கிராமம்
வாய்த்ததொரு பயிரால்!

சோவென்னும் அந்தச்
சுவையான குரலை
ஆவென்று கேட்கும்
ஆகாயந்தானும்
பாவென்றே புலவர்
பகருவார் புகழ்ந்து
தேவுலகம் போலத்
தேசமது தோன்றும்!

மரவள்ளி என்னும் அந்த
மற்றுமொரு பயிரும்
தரையெல்லாம் நிழலைத்
தந்தழகு செய்யும்
உரம் பெற்ற மண்ணில்
ஊடுருவும் கிழங்கு
வரம் பெற்ற பூமி
வாழ்வில் யார் மறப்பார்?

தேனது ஓடும் காடு
திசையெலாம் வண்டின் கூட்டம்
மீனது பாடும் ஆறு
மிக நல்ல அரங்கமாகும்
ஆனது மேயும் புற்கள்
அழகுறு மெத்தை போலாம்
ஊணது மறக்கச் செய்யும்
ஒவ்வொன்றும் அழகுதானே!

மாவது பழங்களோடு
மனம் கவர் வாசத்தோடு
நாவது ஊறச் செய்யும்
நாளெலாம் நினைவில் வாழும்
காவ்து நிழலினோடு
காற்றதன் தழுவலோடு
தேவரின் உலகம் போலத்
தேனகம் தோன்றும் அம்மா!

பருத்த தேன் கனிகளோடு
பலா எனும் பெயரினோடு
விரித்த பல் கிளைகளோடு
விரும்பும் நல் பசுமையோடு
உரித்தென வளவினோடு
ஒரு பெரும் விருட்சமாக
வரித்திடும் உள்ளமெல்லாம்
வான் புகழ் தேசம் அல்லோ

நிழலினை அள்ளிக் கொட்டும்
நிமையினை மூடச் செய்யும்
அழலென எறிக்கும் வெய்யில்
அப்பாலே ஓடச் செய்யும்
வளந்தனைக் காட்டி நிற்கும்
வரும் பிணி தன்னைப்போக்கும்
தலமிதில் வேம்பைப் போல
தருவொன்று உண்டுமாமோ?

வளந்தனைப் பார்த்ததாலே
வாயது ஊறச் சொல்வாள்
பழமென இனிக்கும் காட்சி
பற்பல வடிவம் கொண்டு
விளங்கிடும் ஊர்கள் தோறும்
விபரிக்க முடியுமாமோ?
அழகுறு பெண்ணும் கண்டால்
அழுக்காறு கொள்வாள் என்பாள்

பெண்ணவள் வெட்கப்பட்டு
பிறர் முகம் பாராள் போல
மண்ணிது தோன்றக் கண்டு
மகிழ்ந்ததை முத்தமிட்டு
பொன்னது விளைந்த போதும்
புகழது சுமந்த போதும்
முன்னவர் தேசம் மக்கள்
மூச்சினில் வாழும் என்பாள்

பொட்டினைச் சூடும் பெண்கள்
பூவினை அணியும் பெண்கள்
கட்டது குலையாப் பெண்கள்
கவர்ச்சியைக் காட்டாப் பெண்கள்
பட்டிக்காடென்ற போதும்
பண்பினைப் போற்றும் பெண்கள்
மட்டக்களப்பு கென்றும்
மங்காத தீபமாவார்!

சேரத்துப் பெண்கள் என்று
செப்புவர் உண்மையன்றோ!
ஆரத்தை சூடும் வண்ண
அஞ்சுகம் போலும் என்பார்
வீரத்தை மறைக்கலாமோ
விற்கொடி ஏந்தும் மக்கள்
சாரத்தைச் சொன்னாற் போதும்
சரித்திரம் தானாய்த் தோன்றும்

நாளெல்லாம் உழைக்கும் ஆண்கள்
நலிவினை அறியா ஆண்கள்
வேள்தனை ஆளும் ஆண்கள்
விவசாயி ஆன ஆண்கள்
தாழ்வினை அறியா ஆண்கள்
தலையது நிமிர்ந்த ஆண்கள்
சூழ்வினை எல்லாம் வென்று
சுடரென ஒளிரும் ஆண்கள்

இரும்பினை நொறுக்க வல்ல
இளைஞர்கள் கூட்டமொன்று
வரம்பினை அமைக்கும் அந்த
வயல் வெளி நின்றவாறு
கரும்பென இனிக்கும் நல்ல
கவி மழை பொழியும் அம்மா
விரும்பியே கேட்பார் மக்கள்
விருந்தது கசக்குமாமோ?

பல்வித தொழில்கள் செய்வார்
பாகுபாடேதும் இல்லை
நல்லது தாழ்ந்த தென்று
நவின்றிடும் மக்கள் இல்லை
கல்லையும் மாவாய்ச் செய்யும்
கையது இருந்தால் போதும்
வெல்லுவோம் உலகை என்பார்
வேறென்ன வேண்டுமாமோ?


என் தமிழ் மக்கள் வாழும்
இப்பழம் பூமி தன்னில்
பன்னிறப் பறவைக் கூட்டம்
பவளவாய்க் கிளிகள், மைனா
இன்னிசைக் குயில்கள், சிட்டு
எழில் மிகு மாம்பழக் குருவி
விண்ணினில் உலாவும் ஆலா
விழிகளை உருட்டும் ஆந்தை

கையளவு காடை, மணிப்புறா
காட்டுக்கோழி, கீச்சான்
மையழகு கொண்ட மயில்
மரங்கொத்தி, பூக்குடிச்சான்
செய்யெல்லாம் திரியும் கழனி
செங்கால் நாரை, மழைக்காகம்
ஒய்யார நடைபழகும்
ஒருபெரும் பட்டாளமாகும்

புள்ளிமான், முயல், கரடி
புலிபோலத் தோன்றும் சிறுத்தை
குள்ளத்தனம் மிக்க நரி
கொம்பேறும் குரங்குக் கூட்டம்
முள்ளம்பன்றி, புலுட்டுமான்
முரட்டுத்தனம் மிக்க பன்றி
கள்ளமது இல்லா எருமை
கற்குன்றம் போலும் களிறு

வனமெல்லாம் உலாவரும்
வரிசையாய் நடைபயிலும்
தினம் இது விழாவாகும்
தேசமதன் செல்வமாகும்
மனமெல்லாம் மகிழ்ச்சியோடு
மங்கையவள் நாச்சியார்
தனம் இதைப் பாதுகாத்தல்
தக்க தெனக் கொள்ளுவாள்

இருதிசை தன்னில் தோன்றும்
இயற்கையின் செல்வமெல்லாம்
ஒருபெரும் உண்மை சொல்லும்
உலகினை ஆளும் சக்தி
துரும் பெனும் மனிதன் கையில்
துளியெனத் தானும் இல்லை
அரசனின் புதல்வி நாச்சி
அகத்தினில் பதித்துக் கொள்வாள்



## மானம் போற்றும் மணி

முத்தமிழ் மொழியைத் தங்கள்
மூச்செனக் கொண்டதாலே
பித்தராய் ஆன மக்கள்
பிறரதை அழித்தொழிக்க
எத்தனை செய்த போதும்
எதிர்த்தவர் வெல்லலானார்
சொத்திது தமிழே போதும்
சொர்க்கமும் வேண்டாம் என்பார்!

தாய்மொழி உணர்வினோடு
தணியாத தாகத்தோடு
தேய் பிறை காணா எங்கள்
தேன் தமிழ் அமுதந்தன்னை
வாயினில் மட்டும் அன்றி
வாழ்விலும் முழுமையாக
சேயவர் போற்றலானார்
செகமிது வியக்குமன்றோ!

அந்நிய மொழியின் மீது
அளவிலாப் பற்றினாலே
கண்ணினை இழந்த மக்கள்
காட்சிக்குத் தமிழராவார்
மண்ணிதில் வாழ்ந்த போதும்
மாற்றாராய்க் கருதலானார்
உண்மையே அவரை இங்கு
ஒதுக்கியே தள்ளலானார்!

Importan.

மொழியினை இழத்தல், யாவும்
முழுமையாய் இழத்தலாகும்
பழியிதைக் கொள்ளலாமோ?
பைந்தமிழ்ச் செல்வந்தன்னை
அழியாது காத்தல் வேண்டும்
அரிய நம் உயிரேயாகும்!
தெளிவாக முழங்கலானார்
தேசமே அதிர்ந்து போகும்!

தன்மானம் அற்றோர்
தமிழரல்லர் என்பார்
பொன், பொருள், பதவி
புல்லரவர் விரும்பி
கண் போல் உரிமையைக்
காசுக்கு விற்பார்
மண்ணிலிவர் எதற்கு?
மக்களவர் கேட்பார்

தன்னினத்தை விற்று
தாம் மட்டும் வாழ்வார்
கண்ணிரண்டைக் குத்தி
காணுந் திறனற்று
புண்ணுடனே இருப்பார்
புரைதீருமாமோ?
என்ன பயன் இவரால்
இறக்கும் வரை என்பார்!

மானமது முதலில்
மற்றதெலாம் பிறகு
ஈனமது நேர்ந்தால்
இருந்தென்ன லாபம்?
ஞானமது கொள்க
நாம் தமிழர் அன்றோ!
கானமதில் வாழும்
கவரிமான் ஆவோம்

மொழியினை இழத்தல், யாவும்
முழுமையாய் இழத்தலாகும்
பழியிதைக் கொள்ளலாமோ?
பைந்தமிழ்ச் செல்வந்தன்னை
அழியாது காத்தல் வேண்டும்
அரிய நம் உயிரேயாகும்!
தெளிவாக முழங்கலானார்
தேசமே களிப்பில் முழ்கும்!

என்னுமவர் முழக்கம்
எங்கெங்கோ கேட்கும்
கன்னலென நாச்சி
காதுதனில் இனிக்கும்
தின்னுமொரு கூட்டம்
திகைத்துப் போய் நிற்கும்
பெண்ணவளும் கண்டு
பெரிதாகச் சிரிப்பாள்



## கோவில் குளத்தில் ஒரு கோட்டம்

கோவில் குளத்திலே கோட்டம் எழுந்திடும்
கோமகள் ஆட்சியிலே
நாவிலதன் பெயர் நர்த்தனமாடிடும்
நாடதன் மாட்சியிலே

பொய்கையில் தாமரை பூக்கள் பொலிந்திடும்
பொன்னனி கூடிடுமே
மையறு காலையில் மண்முனை எங்கணும்
மங்களம் பாடிடுமே

கொண்டல்கள் கூடிடும் கோபுரம் மீதிலே
கோயில் குளத்தினிலே
கண்டதும் மஞ்ஞைகள் கலாபம் விரித்திடும்
கண்ணகி நிலத்தினிலே

கோயில் குளமதன் கொஞ்சும் அழகினைக்
கூறுவ தெப்படியோ?
வாயில் வருகின்ற வார்த்தை யெலாம் அதன்
வண்ணம் இழந்தனவோ?

கோட்டத்தில் லிங்கத்தைக் கொண்டவள் வைத்தனள்
கும்பிடுங்கரங்களோடு
நாட்டினின் மக்களும் நாற்புறம் சூழ்ந்தனர்
நம்பி வரங்களோடு


தாழங்குடாவிலே தானெழும் மாளிகை
தையலின் எண்ணத்திலே
ஆளை மயக்கிடும் அம்மலர் போலவே
அற்புத வண்ணத்திலே

பல்வேறு குடிகளும் பாங்குற வாழுவர்
பண்பது காத்திடுமே
நல்மன எண்ணங்கள் நாளும் வளர்ந்திடும்
நண்பது பூத்திடுமே

ஒற்றுமை என்பதை உயிரெனப் போற்றுவர்
உள்ளத்தில் பேதமில்லை
சுற்றமெலாம் அன்புச் சுருதியே பாடுவர்
சொல்லதில் ஏதமில்லை

எல்லாக் கலைகளும் ஏற்றம் பெற்றோங்கிடும்
இன்தமிழ் ஊரினிலே
கல்லா உழவனும் கவிமழை பொழிகுவான்
கற்பனைத் தேரினிலே

தென்மோடிக் கூத்தெனும் தெய்வீகக் கலையது
திசை எட்டும் அளந்திடுமே
மண்வாசம் வீசிடும் மரபுறு கலைகளும்
மனங்களில் குழைந்திடுமே!



## மனதிற்கினிய மணவிழா

சிங்கன் அவன் இளவல் சீர்த்தி மிகு வீரன்
நங்கையரைக் கவரும் நல்ல முக வாகு
தங்கமென ஆட்சி தமையன் அவன் செய்வான்
அங்கமென ஆவான் அவனன்புத் தம்பி

முன்னம் அவன் இராமன் முடி துறந்தபோது
பின் தொடர்ந்து சென்ற பிள்ளை அவன் போல
அண்ணன் அவன் போற்றும் அருமை மிகு இளவல்
இன்னும் அவன் பெருமை எத்தனையோ உண்டு!

இளவல் அவனோடு ஏந்திழையாள் நாச்சி
அழகு மணி மாட அரண்மனையின் விழாவில்
பழகுகையில் தன்னைப் பறிகொடுத்து நின்றாள்
முழு நிலவில் அவனும் முற்றும் தனை இழந்தான்

மாளிகையின் காதல் மலர் போலும் சுகந்தம்
சூழ வர வீசும், சுற்றமெலாம் அறியும்
வாழி என அரசன் வாழ்த்துவான், வதுவை
நாழி தனில் செய்ய நாட் பார்க்கலானான்

மட்டக்களப்பென்னும் மன் புகழ் நாட்டில்
மட்டற்ற களிப்பு மடை திறந்தோடும்
எட்டுமொரு செய்தி ஏற்கும் செவி எல்லாம்
கொட்டும் தேன், உணர்வைக் குறித்திடல் எளிதோ?

மண ஓலை கண்ட மன்னவன் மேகன்
கணப் போதுள் தேரைக் கட்டென்று பணிப்பான்
குணசிங்கன் தேசம் குதிரையது பாயும்
வனமெல்லாம் புழுதி, வான் சேனை தொடரும்

மணவிழா அலையே மட்டக்களப்பெங்கும்
இன விழா என்றே இதழ் எல்லாம் பேசும்
குணவிழா எங்கள் குடும்ப விழா என்பார்
மண விழா அன்று, மன விழா ஆகும்

அனுராதபுரத்து அரசனவன் மேகன்
இனம் வேறேனும் இதயத்தால் இணைந்து
தனதன்பு நண்பன் தம்பியவன் சரனின்
மணம் காணவென்று மகிழ்வோடு வருவான்

விருந்தினனாக வந்த வேந்தனை விருப்பத்தோடு
அருந்தமிழ் மன்னன் சூழ அவனது தம்பியாரும்
கருத்துடன் ஏற்கலானார் கன்னியும் அவனைக் கண்டு
பொருந்து நல் வார்த்தையாலே புகழுரை கூறலானாள்



# வண்ணமலர்ப் பந்தலிலே..

வரிசையாய்க் கால் நட்டு வடிவுறப் பந்தலிட்டு
விரிநதி மணல் பரப்பி விளக்குகள் பல ஏற்றி
மருமலர் மாலை கட்டி மணி இளங் காலையிலே
திருமணம் நடக்குமன்று தேசமே வாழ்த்துப்பாடும்

இசைமழை பொழியும், இணையில்லாக் கலைஞர்
திசையெல்லாம் இனிய தேனோடச் செய்வார்
வசையில்லா அரசி வதுவையதன் போது
பசையென ஒட்டும் பண்ணதிலே உள்ளம்!

அவ்வேளை பெண்கள், ஆண் மக்கள் ஈன்றோர்
நவ்வி விழி அழகி நாச்சியார் குழலில்
ஒவ்வு மலர், நெல் பெய்து உரிய நற் சொற்களால்
செவ்வையாய் வாழ்த்துவார் சிறப்பெல்லாம் சேரும்!

மன்னனவன் சிங்கன் மங்கையவள் கரம் பற்றி
பின்னவனின் கை சேர்ப்பான் பிரியமுடன் அனுபுரத்து
வண்ணனவன் வாழ்த்துவான், வந்தவர்கள் எல்லோரும்
பன்னீர் மலர் தெளித்துப் பாச உரை பகர்வார்

மணமது முடிந்த பின்னால் மதிப்புறு தமைய:ன் பாதம்
மனமுற வணங்குவார்கள், மாமன்னன் மேகன் தன்னை
பணிந்தவர் நிற்கலானார், பங்கேற்க வந்து நின்ற
இனசனமெல்லாம் கண்டு இதயத்தால் போற்றுவார்கள்!

# தாமரை பூத்த தடாகத்திலே

மண்முனைப் பூமி தன்னில் மணிமலர் வாசம் வீசும்
தண் சுனை நீரில் ஆட தம்பதி இருவர் தாமும்
பொன்னொளி படரும் காலைப் பொழுதினில் இறங்கலானார்
பெண்ணவள் நாணிப் போவாள் பெருவெளி ஆனதாலே!

நாணிய பெண்ணைப் பார்த்துநனி இளங்காலை நேரம்
வாணியின் கமலப் பூக்கள் வாய்விட்டுச் சிரிக்குமந்த
மாணிய காட்சி தன்னை மாப்பிள்ளை ரசிக்கலானார்
கூனிய மங்கை நல்லாள் குறும்பினில் சிக்கிப் போவாள்

காற்றது தானும் வந்து கன்னியைக் கட்டிக்கொண்டு
ஆற்றலே இல்லா அந்த அணி இடை ஒடியச் செய்யும்
சேற்றதன் கமலம் இந்தச் செய்கையை நேரில் கண்டு
சாற்றிடும் "நாச்சியாரே சரியாக மாட்டிக்கொண்டீர்"

குறும்பினில் மாட்டிக்கொண்ட கோதையின் வதனம் தன்னில்
அரும்பிடும் வியர்வை, அந்த அதிசயத் தோற்றம் கண்டு
கரும்பினைப் போலும் வார்த்தை காதலன் சொல்வான்நாமும்
திரும்புவோம் நீயும்மெத்தத் திகைத்துத்தான் போனாய்என்றே

ஆடிய குளத்தை விட்டு அகன்றவர் செல்லும் காலை
வாடிடும் பூக்கள் வீணாய் வம்பு ஏன் செய்தோம் என்று
கூடிய காற்றுத் தானும் குற்றமே செய்தேன் என்று
ஓடிடும் இடத்தை விட்டு, ஒயில் இடை நோவும் தீரும்!

# நீலவான் நிலவினிலே

மாலையில் ஓர் நாள் மணமக்கள் இருவரும்
கோலமாய் வானம் கொழித்திருந்த வேளை
சாலவும் தமக்குள் சல்லாபம் செய்து
பால் நிலா வரவைப் பார்த்தபடி இருப்பார்!

நிலவது தோன்றும், நிகரில்லா அழகு!
உலகது மூழ்கும் உணர்ச்சியாம் கடலில்
இலை குழை மரங்கள் எல்லாமே தழுவி
குலவியே மகிழும், குளிர்ந்து போம் பூமி

தங்க விளக்கது தானாக வானத்தில்
தொங்குமது! தூரம் மிகவாயினும்
எங்கும் அதன் ஒளி எழுந்து செல்லும்
மங்கும் அது, மறு படி உயிர்க்கும்

முகிலாடை விலக்கி முகந்தன்னைக் காட்டி
இதந்தனை இழுக்கும், எல்லாமே மயங்கும்
சுகந்தனில் மக்கள் சொக்கியே போவார்
அகமெலாம் இனிக்கும் அற்புதக்காட்சி!


பாற்குடம் உடைந்து பரவுதல் போல
நாற்புறம் நிலவு நதியெனப் பாயும்
'பார் புறம்' என்பான் பாவையின் துணைவன்
ஊர்ப்புறம் எல்லாம் உட்புகுந்தோடும்

வெண்ணிலவா? இல்லை! விழியாவும் பருகும்
பெண்ணிலா என்றே பேரின்பம் கொள்வான்
மண்ணிலா இவளே! மாசில்லாத் தங்கம்
என்னிலா என்பான் இதயமது பொங்கும்

வாடா மலர்கள் வான் எனும் காவில்
ஆடா தசையா தழகினைச் சிந்தும்
ஈடா உனக்கு? இயற்கையின் அற்புதம்
நாடா மனிதா நரம்புனக்கில்லை!

ஆழ்கடல் விளையும் அழுகுறு முத்தம்
நீள்பெரும் வானில் நிலைத்ததெங்ஙனம்?
தாழ் குழல் நாச்சி தனக்குள் வியப்பாள்
சூழ் உலகாளும் சூக்குமம் அறியாள்!

நிலாவதன் ஆட்சி நிகழ்ந்திடும் வேளை
உலாவரும் காற்று ஊரெல்லாம் சுற்றும்
கலாபமே போலும் காரிகை சிலிர்ப்பாள்
பலாவின் சுளையில் பாடுமோர் வண்டு



# திருவிழாத்தேசம்

தேசமெங்கும் விழாக்கள்
தேவலோகம் போல
வாசல் தோறும் பந்தல்
வண்ணமலர்த் தோரணம்

தென்றல் எங்கும் சென்று
தேன் அள்ளிச் சிந்தும்
மன்றல் தோறும் வாசம்
மனதில் களி பொங்கும்

வீதி எங்கும் விருட்சம்
விரிந்த பூக்கள் யாவும்
சோதி அள்ளி வீசும்
சுடரும் தீபம் ஆகும்

இயற்கை என்னும் கன்னி
எழிலின் வடிவமாவாள்
மயக்கும் அவளின் கோலம்
மண் சொர்க்கமாகும்

கண்ணுக்கினிய விழாக்கள்
கங்குல் கூடும் போது
பண்ணும் இசையும் அந்தப்
பாலும் தேனுமாகும்

நாச்சியாரின் நாட்டில்
நாள் விடிந்தால் போதும்
காட்சி இன்பக் கலைகள்
கண்கள் நூறு வேண்டும்

## கொக்கட்டியில் ஒரு கோயில்

திடகன் எனும் பேரான் தேனகத்தில் ஓர் நாள்
அடர்ந்த பெரும் காட்டை அழிக்கையிலே வெட்டி
இடந்தனிலே கொக்கு நெட்டி எனும் மரத்தில்
படர்ந்து வரும் குருதி பைய அதை மறைப்பான்

செய்தி தனை அறிந்த சேல்விழியாள் நாச்சி
அய்யனவன் லிங்கம் ஆங்கிருக்கக் கண்டு
தெய்வமவன் வணங்கத் தேர்ந்த ஒரு கோயில்
வையமது வியக்க வடிவுறவே அமைப்பாள்

கொக்கட்டி ஊரில் கோயில் மணி ஓசை
திக்கெட்டும் கேட்கும், தேர்ந்த கலைவாணர்
அக்கட்டு எழும்பும் ஆலயமாய் அழகாய்
பக்கத்து ஊரும் பாய்ந்து வரும் பார்க்க!

வாயிலதன் கோபுரம் வானமதை அளக்கும்
தோயும் அதில் மேகம் தோரணம் போலாடும்
ஆயும் கலை வல்லோர், ஆதவனின் வெளிச்சம்
பாயும் வரை கோயில் பணி தன்னைத் தொடர்வார்

தேர் தனிலே நாச்சி திருப்பணியைக் காண
ஆர்வமுடன் வருவாள் அவள் தம்மைப் பார்க்க
ஊர் எல்லாம் மக்கள் ஓர் புறமாய்த் திரள்வார்
பேரழகு நாச்சி பெருமையதில் கொள்வாள்

இரு சுற்று எயில்கள் எழுந்தாடும் கொடிகள்
ஒரு சுற்றுச் சுற்ற உடம்பாடிப் போகும்
இருள் சுற்றும் நெஞ்சம் இங்கு வரும் போது
அருள் சுற்றும் அங்கே ஆண்டாண்டு காலம்

குடமுழுக்கு நடக்கும் கும்பலாக மக்கள்
நடந்து வருவார்கள் நாலு திசை இருந்து
"கட கட" வண்டில் காது தனை அடைக்கும்
இடமில்லை அங்கு எள்ளு விழத் தானும்

சங்கோசை முழங்கும் சங்கமர்கள் பூசை
அங்கோசையாகும் அருள் வேண்டும் பக்தர்
பொங்கோசை கேட்கும் பொன்னுலகம் விழித்து
எங்கோசை? என்று எட்டி நிலம் பார்க்கும்

கண் தன்னை மூடிக் கரமிரண்டு கூப்பி
மண் தன்னை மறந்து மாதவர்கள் நிற்பார்
பெண் தன்னை விட்டுப் பேரின்பம் நாடி
விண் தன்னை வேண்டி வேதங்கள் படிப்பார்.


கோயில்விழாக் கண்ட கோதையவள் நாச்சி
வாயடைத்துப் போவாள் வசமிழந்து நிற்பாள்
தாய் போலும் அவளைத் தனய ரவள் மக்கள்
தோய நிலம் வீழ்ந்து தொழுது அடி பணிவார்

ஊரெல்லாம் கூடும் உலகு புகழ்த்தாயை
தேர் மீது ஏற்றித் தெருவெல்லாம் சுற்றும்
பேர் பெற்ற தங்கள் பெண்ணரசி தம்மை
சீராட்டி மகிழும், சிறப்புப்பல செய்யும்!

நாடாளும் அரசி, நாளை இவள் எங்கள்
ஏடாள்வாள், இனியதமிழ்ப் பாட்டாவாள்
வாடாத புதுமலர், வசந்தம், வலாற்றில்
கோடாக நிற்பாள், குடிகளவர் சொல்வார்!

அந்நேரம் மரங்கள் அரசியவள் மீது
பொன் மலர் தூவும், பூங்குயில்கள் வாழ்த்தும்
தண்ணெனக் காற்று தழுவியது மகிழும்
மண்ணது மகிழ்ந்து மங்களங்கள் பாடும்

மங்களம் பாடும் மாநிலமெல்லாம்
பொங்குக இன்பம், பொங்குக செல்வம்
தங்குக அமைதி தலைமை சிறக்க
எங்கள் தேசம் எழுந்தது நிற்கவே!



## எங்கும் தமிழ்....! எதிலும் தமிழ்

நாச்சியார் தேசந்தன்னில் நற்றமிழ் மொழியே நாளும்
ஆட்சியில் இருக்கும் அங்கு அயல்மொழிக் கதையேஇல்லை
காய்ச்சிய பாலில் சேரும் கற்கண்டைப்போலும் மக்கள்
பேச்சது இனிக்கும், அந்தப் பெருமையைச் சொல்லுவேனே!

வாயெலாம் தமிழே, வார்த்தையெலாம் தேனே
தாயவளின் நாவில் தமிழ் மட்டும் வாழும்
சேயதனின் மழலை செந்தமிழே சிந்தும்
ஆய தமிழ் ஒன்றே ஆளுமொரு தேசம்

அஞ்சுகத்தின் பேச்சும் அழகு தமிழாகும்
கொஞ்சும் குயில் இசையில் குழையும் தமிழமுதம்!
பஞ்சு எனக் காற்று படும் போதும் தமிழே
நெஞ்சு தனில் இனிக்கும், நிகரில்லாச் சுகமாம்!

உழவரவர் வாயில் ஊற்றெடுக்கும் தமிழே
மழவரவர் உரையில் மதர்த்துவரும் தமிழே
விழவு தனில் இனிய விருந்தாகும் தமிழே
இழவு அதன் போதும் இனிய தமிழ் இசையே

குழலோசை தனிலும் குளிர்ந்துவரும் தமிழே
முழவு அதன் ஒலியில் முழங்கிவரும் தமிழே
களரி தனில் கேட்கும் கைத்தாளம் ஒலியில்
அழகு தமிழ் ஒன்றே அரசாட்சி செய்யும்

தேன் உண்ணும் வண்டும் தெரிந்து தமிழ் பாடும்
வான் குருவி பறவை வாயெல்லாம் தமிழே!
ஆன் கன்றும் இங்கே அசைபோடும் தமிழே
மீன் ஆற்றில் இருந்து மிதந்து வரும் தமிழே

எங்கும் தமிழ் இனிக்கும், எதிலும் தமிழ் இருக்கும்
தங்கத் தமிழ் என்றும் தலை நிமிர்ந்து நிற்கும்
சங்கத் தமிழ் வாயில் சர்க்கரையே ஆகும்
திங்கள் அது போலத் தெய்வத்தமிழ் ஒளிரும்

எந்தமிழ் மொழிக்கு இணை மொழிஇல்லை
செந்தமிழ் அதுவே செகத்தினில் உயர்ந்தது
இந்த உரை ஒன்றே எங்குமவர் சொல்வார்
சிந்தைதனில் என்றும் சித்திரமாய் விளங்கும்



## தைப்பொங்கல்....தமிழ்ப் பொங்கல்

தையது மலர்ந்தாற் போதும் தமிழரின் வீடு எல்லாம்
நெய்யதன் வாசம்எங்கும் நெஞ்செலாம் இனிக்கச் செய்யும்
பொய் இருள்போகும் வானில் பூத்திடும் ஒளியின் வெள்ளம்
வையக மெல்லாம் பொங்கல் வாசத்தில் மூழ்கிப்போகும்

மூக்கினைத் துளைக்கும்வாசம் மூலைகள் முடுக்கு எல்லாம்
நாக்கது ஊறும் அந்த நறுமண வாசத்தாலே
ஆக்கிய அமுதம் தன்னை அனுபவித்துண்ணும் மக்கள்
ஏக்கமாய்ச் சொல்லுவார்கள் இனி ஒரு வருடமாகும்

அரண்மனை முற்றந் தன்னில் அரசியார் மகிழும் வண்ணம்
ஒரு பெரும் பானை தன்னை ஊரவர் தூக்கி வைப்பார்
அரிசியைக் களைவார் பெண்கள் அடுத்ததைச் செய்வார் ஆண்கள்
உறுசுவைப் பொங்கல் தன்னை ஊரெல்லாம் உண்ணுமம்மா!

பொங்கலோ பொங்கல் என்று பூரிப்பில் மூழ்கும் மக்கள்
மங்கள ஓசை செய்வார், மட்டது பாயும் நாட்டில்
செங்கதிர் சிரிக்கும் வண்ணச் சிரிப்பினில் பூமியெல்லாம்
தங்கமாய் ஒளிரும் எங்கள் தைமகள் பிறக்கும் காலம்

மாடுகள் தாமும் அன்று மகிழ்ச்சியில் திளைத்துப் போகும்
கோடுகள் எல்லாம் மாலை கொழுவியே நடந்து செல்லும்
வீடுகள் எல்லாம் அன்பு விருந்தினராகத் தோன்றும்
நாடுகள் தோறும் இந்த நல்விழா நடக்குமம்மா

பாலது கறந்து மாட்டுப் பட்டியில் பொங்கும் அந்த
நாளது போலும் வேறு நல்ல நாள் உண்டுமாமோ?
வாலது முறுக்கிக் கொண்டு வளையவே பாயும் கன்று
காலது வைக்கும் பூமி கதிர்மணி குலுங்குமாமே!



## அறுவடை விழா

அறுவடை என்றால் இங்கே அரியதோர் விழாவேயாகும்
பெரும்படை திரண்டாற்போல பிள்ளைகள் பெரியோர்எல்லாம்
திருவிருதருந்துவார்கள் தினம் ஒரு இல்லந்தன்னில்
ஒரு மனமான மக்கள் உயிர் அது போற்றுவாரே

பாலுடன் பழமும் நல்ல பதமான தயிரும் மாவில்
கூழுமே சேர்த்து நன்கு குழைத்தை உண்ணுவார்கள்
நாளுடன் உண்ணுமந்த நற்புதிர் அமுதம் தன்னை
சூழ் கடல் வையந் தன்னில் சுவைப்பவர் உண்டுமாமோ?

பகுத்துண்டு வாழும் நல்ல பண்பினை மக்கள் வாழ்வில்
புகுத்தினர் தமிழர் அன்று பூமியோர் போற்றும் வண்ணம்
வகுத்த இவ்வழியிலன்றோ வையகம் நடக்க வேண்டும்
அகத்தினில் கொள்ளும்மக்கள் அடியது வணங்க வேண்டும்!

சமத்துவம் இல்லை என்றால் சமூகமே பாழாய்ப் போகும்
கமத்தினைச் செய்யும் மக்கள் கண்டனர் இதனை அன்று!
மகத்துவம் மிக்க நல்ல மனிதாபிமானக் கொள்கை
இகத்தினில வளரச் செய்யும் எந்தமிழ்த் தேசமன்றோ!


'வெள்ளாமை' வெட்டும் காலம் விரும்பு நல் ஆடல்பாடல்
உள்ளமே களிக்கும் வண்ணம் ஊரெல்லாம் நடக்கும்வேளை
நல்லிரவான போதும் நாச்சியார் தேசந்தன்னில்
வெள்ளமாய் மக்கள் கூட்டம் விழாவது போலத்தானே!

ஆடலும் பாடலோடும் அமர்க்களம் செய்யும் ஊர்கள்
கூடலும் ஊடலோடு குடும்பங்கள் மூழ்கிப் போகும்
நாடெல்லாம் இதுவே அந்த நாட்களில் தேசந்தன்னில்
பாடிடும் புலவர்க்கெல்லாம் பால்பழம் உண்டாற்போல

அரண்மனை முற்றந்தன்னில் அறுவடை நடக்கும் காலம்
ஒரு பெரும் தொகையாய் நெல்லை உரியதம் அரசியார்க்கு
உரிமையோடளிக்கும் மக்கள் உவகையில் திளைத்துப்போவார்
அரிய இவ்வுறவு வேறு ஆட்சியில் காணலாமோ?

பட்டடை தாங்கும் முற்றம், பகலவன் ஒளியில் காயக்
கொட்டிடும்நெல்லை வந்து கோழிகள் தின்னும் ஆங்கு
விட்டதைப் புதினம் பார்ப்பார் விரட்டிடும் மனமே இல்லை
முட்டவே தின்னும் கோழி முகமது மலருமம்மா!

'வெள்ளாமை' வெட்டும் காலம் வீடெலாம் இதனைப் போல
பல்லாயிரம் காட்சி கண்டு பரவசம் அடையும் மக்கள்
இல்லாமை என்னும் சொல்லை என்றுமே அறியமாட்டார்
நல்லவள் ஆட்சிதன்னில் நாடது சொர்க்கமாகும்



# கண்ணகி விழா

பொன்னியதன் பூமி, புகழ் மிக்க தேசம்
மண்ணினில் உயர்ந்தது மாமன்னன் சின்னம்
விண்ணினில் ஆடும் வேங்கையது அறிவோம்
கண்ணினில் விரியும் கரிகாலன் பெருமை

நதியெல்லாம் நாவாய் நால்விதப் பொருட்கள்
பதியெல்லாம் மக்கள் பலநூறு கடைகள்
விதியெல்லாம் தோற்கும் வீரமதன் முன்னே
கதியெல்லாம் குவியும் காவிரியின் பூமி

இந்நகர் உதித்தாள் எழில் மிகு நங்கை
கண்ணகி என்பாள் கற்பதன் செல்வி
தொன்னகர் தன்னில் துணையவன் மாய்வான்
அந்நகர் எரியும் அணங்கிவள் திறத்தால்!

மதுரையம்பதியை விட்டு மாநகர் வஞ்சி என்னும்
புதுநகர் போவாள் அங்கு புனிதையாய் ஆவாள், நாட்டில்
அதுமுதல் தெய்வமாக அனைவரும் வணங்கலானார்
இது எங்கள் தேசந்தன்னில் எடுத்தடி வைக்குமன்று!

கடல் சூழ் இலங்கைக் கயபாகு மன்னன்
மடந்தையவள் விழாவை மண்ணிதிலே நட்டான்
தொடர்ந்தது நடக்கும் தூயை அவள் பெருமை
படர்ந்தெங்கும் பரவும் பக்தர்கள் குவிவார்

நாச்சியார் அரசில் நங்கையவள் விழாவின்
காட்சிகள் தோன்றும் கண்ணெல்லாம் கவரும்
ஆட்சியதன் பொறுப்பில் அழகுறவே எல்லாம்
மாட்சியுடன் நடக்கும் மன மதிலே மூழ்கும்

தென், வடசேரி என்று தேன்விளை நாடு தன்னில்
வன்கொம்பு விளையாட்டு வருடாந்தம் நடக்கும்
பெண்ணரசி பத்தினி பெருங்கோபம் தீர்த்து
மண் குளிரச் செய்யும் மக்களவர் பண்டிகை!

வசந்தனவன் கூத்து வண்ணமுற நடக்கும்
அசைந்துவரும் தென்றல் அதுபோலப் பாட்டு
இசைந்து வரும் காதில் இனிய தேன் வார்க்கும்
கசந்த மன மங்கை களி கொள்ளும் விழாவே

வீதிதனில் குடங்கள் வெண்ணிலவைப் போல
சோதியதன் வெள்ளம் சில சொற்களில் வருமோ?
மேதினியும் இதனால் மேன்மை மிகக் கொள்ளும்
காதினிக்கும் வண்ணம் கதைத்தவரும் மகிழ்வார்

சோடினையால் நாடு சொர்க்கம் போலாகும்
வாடின முகம் இல்லை வைகாசித் திங்களில்
சூடின பூக்களெல்லாம் சுகந்தமே பரப்பும்
கூடினர் மக்கள் எல்லாம் குதூகலமே நிறையும்



வெட்டை வெளி தன்னில் வீசி வரும் காற்றில்
வட்டைக் குடைபோலும் வடிவான களரி
நட்ட நடு நிசியில் நாற்புறமும் பாயும்
பட்டப் பகலாக்கும் பால் நிலவு வெள்ளம்

சூழ்ந்து வரும் மக்கள், சுறு சுறுப்பாய்க் கடைகள்
வாழ்ந்து வரும் கலையை வரவேற்கும் கோலம்
ஆழ்ந்த தமிழ்ச் செல்வம், ஆன்றோர்கள் சொத்து
தாழ்ந்ததில்லை எங்கள் தமிழ் மண்ணில் என்றும்

களரியது கூடும் களங்கமில்லாக் குரலில்
அழகாக வேலன் அண்ணாவி இசைப்பான்
முழங்கும் அது எங்கும், முக்கனியின் சுவையை
வழங்குமது காதில், வசமிழந்து போவார்

பிற்பாட்டுக்காரர் பெரிதும் அதை மீண்டும்
அற்புதமாய்ப் படிப்பார், ஆகாயம் பாயும்
நற்பாட்டுத் தொடரும், நாடி வந்த மக்கள்
கற்சிலையைப் போல கண் விழித்துக் கேட்பார்

வெள்ளையது பிடிப்பார் வீரன் அவன் வரவு
வெள்ளமென மக்கள் விழுந்தடித்துக் குவிவார்
பள்ளு மழை பொழியும் பாட்டரசன் வேலன்
கள்ளு என இனிக்கக் கைத்தாளம் தீர்வான்

கன்னனவன் வருவான் கதிரவனைப் போல
பென்னம் பெருந் தேரில் பிரபஞ்சம் ஒடுங்கும்
மன்னனவன் முகத்தில் மாவீரம் துள்ளும்
விண்ணனவன் போரில் வில்லாளன் அன்றோ!

சல்லியனே இருப்பான் சாரதியாய்த் தேரில்
வில்லோடு கன்னன் வீரமதன் சின்னம்
கொல்லுதலே அரசர் கொள்கை எனும் உள்ளம்
நல்லவனே அவனும் நடத்தும் ஒரு விதியே

செருக்களம் சுற்றி சிவந்த விழியோடு
அருக்கனின் புதல்வன் அதிரவே வருவான்
மறுக்களே இல்லா மாவீரன் அவனை
நெருக்குவார் அற்பர், நிகரில்லை என்றே.

விட்டவனும் அகல்வான் விஜயன் அவன் எதிரே
சட்டெனவே வருவான் சரமழையைப் பொழிவான்
பட்டெனவே கன்னன் பகழியது பாயும்
தொட்டதுவே நாசம், துரியன் அவன் மகிழ்வான்.

விண்ணவரும் வியப்பார் வீரப்போர் பார்த்து
மண்ணவர்கள் தாமும் மனமுறைந்துபோவார்
முன்னெவரும் செய்யா முழு அளவு யுத்தம்
என்னவரும் சொல்வார் இடி ஓசை கேட்கும்


நெருப்புதனைக் கக்கும் நெடுங்கணைகள் பாயும்
கருப்புகையில் உலகம் காணாமல் போகும்
மருப்புதனைக் கொண்ட மதயானை போல
விருப்புடனே கன்னன் வெம்போரே செய்வான்

காண்டீபம் முழங்கும் கண்ணனவன் சிரிப்பான்
ஆண்டவனே வரினும் அழிவுன்னைச் சேரும்
தூண்டுமவன் வார்த்தை தொட்டு நாண் இழுப்பான்
பாண்டவரில் வீரன் பார்த்தனவன் அன்றோ?

தேர் இழந்து போவான் தேரோட்டி மைந்தன்
வேர் இழந்த மரமாய் வெறுந்தரையில் நிற்பான்
ஆர் இழந்த போதும் அவன் இழக்கலாமோ?
பார் இழந்ததம்மா பார்த்தன் அவன் கொன்றான்

கன்னனவன் மாண்ட கதையோடு கூத்து
துன்பமுற முடியும், துடித்தவரும் அழுவார்
எண்ணமதைக் கூத்தில் இழந்திருந்த நாச்சி
கண்ணிருந்து வெள்ளம் கன்னமதில் ஓடும்!

கூத்து தனைப் பார்த்து குழந்தையென நெகிழ்ந்த
பூத்த விழி நாச்சி பொன்னள்ளித் தருவாள்
பார்த்தவர்கள் எல்லாம் பாராட்டி மகிழ்வார்
மூத்த கலை வாழும் மூதூரே வாழ்க!



# வெறியாட்டு

வேலினைக் கையில் ஏந்தி வேலனும் ஆடும் போது
காலது நிலத்தில் நிற்கா ககனத்தில் பாயப் பார்க்கும்
வாலிபப் பெண்கள் எல்லாம் வந்ததை மறந்தே போவார்
நால்வித உணர்ச்சி வெள்ளம் நரம்பினில் முட்டிக்கொள்ளும்

கையது வேலைத் தாங்க கண்ணது கோபம் தாங்க
அய்யனின் பாதம் அந்த அழகிய கழல்கள் தாங்க
செய்யவன் நெஞ்சம் வண்டு சேர் மலர் ஆரம் தாங்க
மெய்யது வீரம் தாங்க மேலவன் ஆடலானான்

ஆடுவான் வேலன் அந்த ஆகாயந்தானும் அஞ்சு
கூடுவார் மக்கள் எல்லாம் கும்பிடும் கைகளோடு
சூடுவார் மாலை பின்னி சுந்தரன் மார்பின் மீது
பாடுவார் குறிஞ்சி மண்ணின் பண்ணது இனிக்குமம்மா

தெய்வமே அவனே என்று சேர்ந்தந்த மக்கள் கூட்டம்
உய்யவே வேண்டி அங்கு உரக்கவே சத்தம் போடும்
அய்யனே முருகா எங்கள் ஆருயிர்த் தலைவா இந்த
வையமே மகிழும் வண்ணம் வாய் திறந்தருளுவாயே

கூடிய மக்கள் கூட்டம் கூக்குரல் போடக் கேட்டு
ஆடிய வேலன் ஆங்கு அரிய நல் கட்டுச் சொல்வான்
வாடிய மக்கள் உள்ளம் வனப்புறு மலரே யாகும்
நீடிய மகிழ்ச்சியாலே நிலம் விழுந்தேத்துவாரே

குறியது கேட்டதாலே குதூகலம் அடைந்த மக்கள்
வெறிஅயர் வேலன் உள்ள வேட்கையைத் தணிக்கத்தானே
மறியதன் கடாவை வெட்டி மகிழ்ச்சியில் படைக்கலானார்
உரியதோர் பலியேயென்று உவந்தவன் ஏற்றுக்கொள்வான்



# சிறு தெய்வ வழிபாடு

மடை ஒன்று வைப்பார்
மலர் பழங்களோடு
படையல் அதுவாகும்
பரமனவன் முன்னம்
தடையொன்றும் இல்லை
தத்துவங்கள் பாரார்
நடைமுறை வணக்கம்
நம் தேசம் போற்றும்

நெற்றிதனில் நீறு
நின்றழகு செய்ய
முற்றுமொரு பக்தி
முகமெல்லாம் தெரிய
பற்று மிரு கைகள்
பத்திரங்கள் தாங்க
சுற்றமெலாம் சேர்ந்து
சொல்ல திருநாமம்

உடுக்கோசை கேட்டு
உருவேறி ஒருவர்
நடுக்கத்தோடாடி
நடுக்காட்டில் நின்று
மிடுக்கோடு சொல்வார்
மிக நல் வார்த்தை
சடங்கு இது மக்கள்
சஞ்சலங்கள் தீர்க்கும்

வயிரவரின் சடங்கு
வதனமார் சடங்கு
உயிரெனக் கொள்வார்
ஒவ்வொரு ஆண்டும்
மயிரது சிலிர்க்கும்
மனமெல்லாம் பெருக்கும்
துயரது போக்கத்
துதியவர் செய்வார்

அன்றந்த வேலன்
ஆடலது தன்னை
இன்றிந்த மண்ணில்
இச்சடங்கு காட்டும்
என்றெங்கள் மக்கள்
எடுத்துரை செய்வார்
நன்றதன் பெருமை
நாவெல்லாம் பேசும்

சிறு தெய்வ வணக்கச்
சிறப்புதனை எங்கள்
ஒரு தேசம் மட்டும்
உள்ளபடி உணரும்
பரனவன் தன்னைப்
பல வடிவில் கண்டு
உருகுமொரு கூட்டம்
உலகில் வேறில்லை

சங்ககாலம் சொல்லும்
சமூகமது இன்று
எங்கள் காலம் வாழும்
இது உண்மையாகும்
பங்கமில்லா வாழ்க்கை
பண்பாடு சரித்திரம்
மங்கவில்லை இன்றும்
மட்டக்களப்பு மண்ணில்

# போர்க்களம்

காரது குவிதல் போல கண்ணிமைப் போதுக்குள்ளே
போரது மூளும் அந்தப் புராதன நகரம் தன்னில்
வேரது போலும் மன்னன் விரோதியாய் ஆனான் என்று
ஊரது கதைக்கும், ஆயின் உண்மையை அறியமாட்டார்

தன்னலக்காரன் தீசன் தளபதி அவனே நாட்டின்
மன்னனை அகற்றிவிட்டு மகுடத்தைச் சூடத்தானே
பின்னிய சூழ்ச்சியாலே பிரிவினை படையில் தோன்றும்
வண்ணனும் இந்தச் சூது வலையினை உணர வில்லை

திடீரெனக் கலகம் மூளும் திகைத்தனன் தேசம் ஆள்வோன்
படீரெனத் தனது பக்கம் படையதன் தலைமை ஏற்று
முடிவுறச் சண்டை என்று மூர்க்கமாய்ச் செய்யலானான்
மடிந்தது வீரர் கூட்டம் மண்ணது சிவப்பு ஆகும்

ஒரு நாடு இரண்டு ஆகும் ஊரெல்லாம் கலகம் நீளும்
திருநாடு தன்னைத் தின்ன தீசனும் எண்ணம் கொண்டான்
கரி நாடு ஆமோ என்று மக்களும் கதைக்கலானார்
சிறு நாடு செயலைப் பார்த்து சிரித்திடும் உலகம் எல்லாம்

அனுபுரச் சண்டை தன்னை அகிலமே வெறுத்துப் பேசும்
தினமொரு அரசனென்றால் தேசமும் பிழைக்குமாமோ?
பிணமென மக்களானால் பேய்களே அரசுசெய்யும்
மனமது மறந்ததாலே மண்ணது மயானமாகும்

தீசனின் படைகள் எல்லாம் திமு திமு என்றே அந்தத்
தேசத்தின்அரசன் இல்லம்தெரியாமல் வளைத்துக்கொள்ளும்
நாசத்தின் விளிம்பில் நாடு நல்லவர் எல்லாம் சொல்வார்
நீசரை எதிர்த்து மன்னன் நெடியதோர் யுத்தம் செய்வான்

வாளோடு வாள்கள் மோத வயிரம்பாய் மலைகள் போலும்
வேலோடு வேல்கள் மோத வேகமாய்த் தேர்கள் மோத
ஆளோடு ஆள்கள் மோத அமரரே அஞ்சும் வண்ணம்
ஊழோடு ஊழ்கள் மோத ஒரு பெரும் யுத்தம் செய்வார்

தலையது வீழும் மண்ணில் தனியொரு முண்டமாகும்
மலையது வீழ்ந்தாற் போல மாபெரும் வீரர் சாய்வார்
நிலமது அதிரும் ஆங்கு நிகழ்வன யாவும் கண்டு
அலையது தானும் மெல்ல அடங்கிடும் அச்சத்தாலே

ஆனைகள் குதிரையோடு அணியது வகுத்து வந்த
சேனைகள் மோதும் அந்தச் செருக்களம் தன்னில் நின்று
சோனைகள் போலும் ஈட்டி சொரிந்தனன் தீசன் அந்த
வானினை மூடும் அம்பு வாய்த்ததோர் யுத்தமம்மா!

மன்னவன் வீரர் எல்லாம் மடிந்துயிர் நீத்ததாலே
என்ன தான் செய்வதென்று ஏங்கிய மேகன் தானும்
சின்னவன் தீசன் கையில் சிக்கவே கூடாதென்று
தன்னையே மாய்த்துக் கொள்வான் தன்னுடை வாளினாலே

மன்னனும் மாண்டு போன மனத்தினை வாட்டும் செய்தி
அன்னவன் தோழன் கேட்டு அதிர்ச்சியே அடைந்தானாகி
தன்மன வேகத்தாலே தனக்குள்ளே சொல்லிக்கொள்வான்
உண்மையை உரித்துவைக்கும் ஒவ்வொரு வார்த்தைதானும்

சூதுகள் செய்யும் நாடு சூழ்ச்சிகள் மிக்க நாடு
வாதுகள் புரியும் நாடு வாளினை நம்பும் நாடு
தீதுகள் பெருகும் நாடு தீயவர் கையில் நாடு
தாதரைப் போல மக்கள் தலைவனே இல்லா நாடு

ஆளவே வேண்டுமென்னும் ஆசைகள் கொண்டோராலே
மாளுவார் மக்களெல்லாம் மண்ணது மயானம் ஆகும்
நீளுமே துன்பம் அதனை நீக்குவார் யாரும் இல்லை
வாழுமோ எங்கள் தேசம் வரலாறு சொல்லும் நாளை!

அரசியலாலே மக்கள் அனாதைகள் ஆனார் இன்று
இரகசியம் ஏதும் இல்லை இலங்கையில் நாளும் சண்டை
மரணத்தின் ஓலம் எங்கும் மனிதமும் செத்துப் போகும்
வரமிது ஒன்றே மக்கள் வாழ்க்கையில் கிடைத்ததாமோ?

மைத்துனன் சிங்கன் போல மண்முனை அரசி நாச்சி
கைத்திடும் உள்ளமாக கவலையில் மூழ்கிப் போவாள்
இத்தரை தன்னை அந்த ஏந்தலே எனக்குத் தந்தான்
அத் தகு மனிதன் தன்னை அகமது மறக்குமாமோ?

புத்தரின் தேசந்தன்னில் போரது நடக்கலாமோ?
கத்தியும் வாளும் இங்கே கைகளில் இருக்கலாமோ?
நித்தமும் சண்டை என்றால் நாடிது நிலைக்குமாமோ?
சித்தமே குழம்பிப் போன சேயிழை அரற்றலானாள்!

கருணையே வடிவமான கௌதம புத்தர் சொன்ன
அருமறை போற்றும் இந்த அழகிய ஈழமண்ணில்
அரசதைக் கவர வேண்டி அடுத்தவன் உயிரை மாய்த்தல்
ஒரு பெரும் பாவம் என்று உணருவார் இல்லையாமோ?

எங்களின் தேசந் தன்னை இணையிலா அசோக மன்னன்
சங்காரம் செய்த போது சனமெல்லாம் அழிந்ததாலே
பங்கமேயாகித் தர்மப் பௌத்தத்தை தழுவலானான்
சங்கமே போற்றும் இந்தச் சரித்திரம் மறக்கலாமோ?

காலது ஒடிந்த ஆட்டைக் கண்டதும் நெஞ்சந் தன்னில்
வேலது பாய்ந்தாற் போல வெதும்பிய புத்த தேவன்
நூலது போற்றும் மண்ணில் நுண்ணறிவில்லா மாந்தர்
கோலது வளைந்ததாலே கொன்றுயிர் மகிழ்கின்றாரே

அறவழி சென்ற ஞானி அகிம்சையைத் தந்த ஞானி
பிறர் துயர் கண்ட போது பெருந்துயரடைந்த ஞானி
மறவழி ஏற்கா ஞானி மாற்றாரைத் தானும் நல்ல
உறவென மதித்த ஞானி உயிர்க்கொலை வெறுத்த ஞானி

புத்தரின் பூமி இன்று புனிதமே இழந்து போகும்
இத்தரை மீதுஓடும் இரத்தமே சாட்சியாகும்
நத்திடும் அமைதி இந்த நாட்டினில் காணவில்லை
எத்தனை காலம் இந்த இழிநிலை தொடரும் என்பாள்

ஒவ்வொரு உயிரும் போற்றும் உயர்மிகு வேதம் தன்னை
செவ்வையாய்க் கொள்ளும் போதே செகமது சொர்க்கமாகும்
அவ்விதம் இல்லையாயின் அறவணன் தன்னைப்பற்றி
ஒவ்வுமோ வெற்றுப் பேச்சு? உதடதன் உளறல் ஏனோ?

புத்தரின் சீடர் என்று போதிக்கும் சிலரின் பேச்சு
பித்தரின் வார்த்தையாகும் பேய்களும் அச்சம் கொள்ளும்
நித்தமும் தம்மைப்பற்றி நினைத்திடும் இவர்கள் தம்மை
இத்தலம் ஒதுக்க வேண்டும்! இவர் என்ன துறவியாமோ?

உடை என்ன செய்யும்? ஒருவரின் உள்ளத்தைப்
படமாக காட்டுமோ? பதில் சொல்வார் யாரோ?
புடம் போட்ட தங்கம் புத்தர் பிரான் சென்ற
தடம் மாறிச் சென்றால் தருமமது பொய்க்கும்

என்றெண்ணீ நாச்சி இதயமது கலங்குவாள்
நன்று நாம் வாழ நமக்குள்ளே ஒற்றுமை
ஒன்றுதான் வேண்டும் உண்மை இது உணர்ந்தால்
தென்றலது வீசும் தேவியவள் சொல்வாள்



## அன்னையின் அறிவுரை

இல்லறம் துய்ப்பார் இருபேரும் சேர்ந்து
நல்லறம் அதுவே! நாடெல்லாம் போற்றும்
தொல்லறம் பேணி தொண்டு பல செய்வார்
பல்லறப் பலன்கள் பரந்திடும் வாழ்வில்

ஆண்டு சில கழியும் அணங்கவள் நாச்சி
மாண்புறு மக்கள் மங்கலங்கள் பெறுவாள்
காண்பவர்கள் விழிகள் காந்தமென இழுக்கும்
ஆண், பெண் இருவர் அரசியவள் வம்சம்

இருவரும் வளர்வார் இளங்கொடிகள் போல
உருவது கண்டு உளம் மகிழ்வாள் அன்னை
பருவமது மாறும், பரி யானை ஏற்றம்
சருவ கலை கற்பார் சத்திரியர் அன்றோ?

ஒழுக்கமே ஒருவர் உயிராகும் என்று
விளக்குவாள் அன்னை விளம்புவாள் இன்னும்
பழக்கங்கள் யாவும் பழுதறக் கொள்க
வழக்கங்கள் என்று வாதிடல் கூடா!

கதை பல சொல்வாள் காவியங்கள் கூறும்
வித வித நீதி விபரமாய் உரைப்பாள்
நிதம் அவள் சொல்லும் நிறை உரை கேட்டு
இதமெனக் கொள்வார் இனிய நல் மக்கள்

தாய் நாடு கலிங்கம் தந்தையவர் பெருமை
வாய் குளிரச் சொல்வாள் வரலாறு சொல்வாள்
சேய் நாடு ஈழம் செந்தமிழின் சிறப்பு
ஆய்ந்தவள் சொல்வாள், அத்தனையும் உண்மை

அன்னையவள் மேலும் அழகாகச் சொல்வாள்
சின்னவர்கள் அதனைச் செவிமடுத்துக் கேட்பார்
பின்னமில்லா வார்த்தை, பேச்சு தனில் தெளிவு
கண்களில் அன்பு கலந்தவளும் சொல்வாள்

நாடதில் பற்று நாம் கொள்ள வேண்டும்
வீடதுவாகும், விளக்கேற்ற வேண்டும்
தேடரும் செல்வம் தேசமென எண்ணி
கூடி நாம் வாழ்வோம் குறையொன்றும் வாரா!

மாற்றாரின் கையில் மண்ணிதைத் தந்தால்
தூற்றுமிவ் வுலகு துரோகிகள் ஆவோம்
சோற்றுக்கு வாழும் சுயநலம் வேண்டாம்
போற்றும் நம்தேசம் புகழ்பாட வேண்டும்

பாடுபட்டுழைத்துப் பலன் பெற வேண்டும்
ஈடில்லை இதற்கு இவ்வுலகில் என்றும்
கேடு அது சுரண்டல் கீழவரே செய்வார்
வாடுமொரு உயிர் வாழ்வு தர வேண்டும்

மன்னவன் ஆளினும் மக்களவர் இறைமை
கண் போலக் காத்தல் காவலனின் கடமை
எண்ணிலா இனங்கள் வாழுமிந்நாட்டில்
இன்னலது தீர இது ஒன்றே மார்க்கம்

மக்கள் தான் அரசர் மற்றொருவர் இல்லை
திக்கெல்லாம் இதனைத் தெளிவாகச் சொல்வோம்
சிக்கலது தீர சிறந்து வழி இதுவே
பக்குவம் அற்றோர் பாராளலாமோ?

இயல் - 33

# முடிசூட்டுவிழா

ஆண்டது ஓடிப்போகும்
அரசியின் மைந்தன் என்பான்
பூண்டனன் மகுடம் முத்து
புதுயுகம் தோற்றம் கொள்ளும்
காண்டகு காட்சி, காணும்
கண்ணது குளிரச் செய்யும்
ஆண்டகை இளவல் தம்மை
அனைவரும் வாழ்த்தலானார்

முடி சூட்டு விழா வைக்காண
மூத்தவர் சிறியோ ரெல்லாம்
கடிதினில் குவியலானார்
களிப்பினில் மூழ்கலானார்
படிதனை ஆளும் அந்தப்
பாவையாள் பாசத்தோடு
குடிகளை ஓம்பலானாள்
குளிர்ந்திடும் உள்ளமெல்லாம்

அதிசுதன் என்னும் அந்த
அரசனின் ஆட்சி தன்னில்
மதியது குடையேயாகும்
மணியது விளக்கமாகும்
புதிதெனத்தேசம் தோன்றும்
புன்மைகள் அழிந்தே போகும்
பதியது சொர்க்கம்என்று
பகருவார் மக்கள் எல்லாம்

அருங்குறள் செங்கோலாக
அகப் பொருள் வாழ்க்கையாக
திருமொழி தமிழே எங்கள்
தேசத்தின் உயிரேயாக
வருமொரு பகையை வெல்ல
வாயிலில் புறமும் நிற்க
ஒரு பெரும் குன்றமாக
உயர்ந்தது எங்கள் தேசம்!

பூதங்கள் ஐந்தும் சேர்ந்து
புரவலன் முன்னம் தாழ்ந்து
பாதங்கள் இரண்டும் தாங்கும்
பரவசம் எங்கும் தோன்றும்
வேதங்கள் ஒலிக்கும் காலை
விடிந்திடும் பொழுதில் இன்ப
நாதங்கள் கேட்கும் மட்டு
நாடது களிக்கும் அம்மா!

அன்னையும் யாவும் கண்டு
ஆனந்தக் கடலில் ஆழ்வாள்
பொன்னிவன் பெற்றதாலே
பூமியில் உயர்ந்தேன் என்று
கண்ணது கசியலானாள்
களிப்பினில் கரையலானாள்
மன்னவன் பாசத்தாலே
மாதாவைத் தழுவிக் கொள்வான்!

## மங்களம் சுப மங்களம்

மங்களம் தங்குக மட்டக்களப்பென்னும்
எங்கள் நிலத்தினிலே - வளம்
பொங்கும் தலத்தினிலே
தெங்கு பலாவோடு தேன் கதலி வாழை
எங்கும் செழிக்கட்டுமே - மண்ணில்
தங்கிக் கொழிக்கட்டுமே.

நெல்லு வயலோடு நீண்ட காடு எலாம்
முல்லை குலுங்கட்டுமே - அதன்
எல்லை விளங்கட்டுமே
கல்லு மலையெல்லாம்காணும் குறிஞ்சிகள்
மெல்ல விரியட்டுமே - அழகை
அள்ளிச் சொரியட்டுமே.

அலையின் முதுகிலே ஏறி அமர்ந்திடும்
கலங்கள் விரையட்டுமே - மீன்
குலங்கள் நிறையட்டுமே
நிலையாய் இருந்திடும் நீரின் அடியிலே
நித்திலம் விளையட்டுமே - அதை
இத் தலம் அளையட்டுமே


கூத்து எனும் கலை கோலாட்டம் கும்மிகள்
காத்து நாம் வளர்த்திடுவோம் - அதைப்
பார்த்து நாம் மகிழ்ந்திடுவோம்
மூத்த தமிழ் மொழி மூச்சு நமக்கது
மோதும் பகை அழிப்போம் - அது
வேதம் என மொழிவோம்

# நன்றியுரை

இவ்விலக்கியப் படைப்பினைத் தமது நிறுவகத்தின் மூலம் ஒரு நூலாக வெளியிட முன் வந்த திரு. ஏ. கங்காதரன் அவர்களுக்கும். இப்பணியில் அவருக்குப் பெரும் ஊக்கம் அளித்த திரு. பா. இன்பராசா (ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர்) அவர்களுக்கும் எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை. சமூகப்பணியில் சளைக்காது ஈடுபட்டு வரும் இவ்விருவருக்கும் எனது தலை தாழ்ந்த வணக்கங்கள்.

இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டு தந்த கூழாவடி ஷெரோணி அச்சக உரிமையாளர் G.சந்தராஜனை மறக்க முடியுமா, என்ன? அவருக்கும் அவரது அச்சகபணியாளர்களுக்கும் எனது அன்பார்ந்த நன்றி

வாகரை வாணன்



# நிலமும் வளமும்

தென்னை மரத்தேசம்
திரிந்து வரும் காற்று
புன்னை மரங்கண்டு
புகுந்து விளையாடும்
வண்ண மலர் தாழை
வாசமதில் மூழ்கும்
மண் நாங்கள் வாழும்
மட்டக்களப்பம்மா!

மஞ்சள் நிறக்கதிர்கள்
மருத நிலம் சூடும்
கொஞ்சும் அதைக்காற்று
குசுகுசுக்கும் ஏதோ?
பஞ்சமில்லாப் பூமி
பார்ப்பவர்கள் கண்ணில்
மஞ்சமெனத் திகழும்
மட்டக்களப்பம்மா

கனி தூங்கும் சோலை
கலகலக்கும் காற்று
தனி அரசு செய்யும்
தடாகங்கள் தோறும்
பனி மலர்கள் சிரிக்கும்
பகல் இரவெல்லாம்
மணி என ஒளிரும்
மட்டக்களப்பம்மா!

குன்றமது தன்னைக்
கொடி மலர்கள் கூடி
நன்றழகு செய்யும்
நடந்து வரும் காற்று
நின்றதிலே ஆடும்
நேரிழையைப் போல
மன்று எனத் திகழும்
மட்டக்களப்பம்மா

- வாகரைவாணன்

Sheroni Printers & Publication - 065 22228660